# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 326 ஐப்பசி 04 ஆம் நாள் திங்கட்கிழமை 21 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


### புதுக்குடியிருப்பில் எலும்புக் கூடுகள் நேற்று மீட்பு

முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தோட்டக் காணியில் எலும்புக் கூடுகள் காணப் 23

# கோரிக்கைகளை நிராகரிக்கும் கோத்தாவுடன் பேசத் தயாரில்லை

## மாவை. எம்.பி. திட்டவட்டம்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21**

**தமிழ்க் கட்சிகளின் 13 அம்சக் கோரிக்கைகளை நிராகரிக்கும் கோத்தபாயவுடன் பேச்சு நடத்த தயாரில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.** 06



## மூடுந்தை பந்தாடியது டிப்பர் ஒருவர் பரிதாபகரமாகச் சாவு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 21

டிப்பர் வாகனம் மூடுந்துடன் (ஹைஏஸ்) மோதியதில் விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் நான்கு பேர் படுகாயம 23

## யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் நியமனத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஒக். 21

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவைக்கு உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரச தலைவர் தேர்தலுக்கு முந்திய 23

### தேர்தல் தொடர்பில்

## வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்கள் ஆர்வம்

கொழும்பு, ஒக். 21

அடுத்த மாதம் நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தல் மீது சில வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் முதல் முறையாக அதிக ஆர்வம் காட்டுகின்றன என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளின் 23

## 5 கட்சிகளின் கூட்டு நிரந்தரமாகவேண்டும்

### புளொட் தலைவர் சித்தார்த்தன் விருப்பம்

வவுனியா, ஒக். 21

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் எமது கோரிக்கைகளை நிராகரித்தால் அடுத்த கட்டம் தொடர்பாக 5 கட்சிகளும் கூடி 23

## விடுதலைப் புலிகளின் சீருடைகள் மீட்கப்பட்டன



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் சேட்கள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு இரணைப்பாலைகுழந்தை யேசு ஆலயத் 06

## முன்னாள் படை அதிகாரிகள் சிலருக்கு வாய்ப் பூட்டு!

கொழும்பு, ஒக். 21

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை வாய் திறக்கக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவ அதிகாரிகள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் கோத்தபாயவுக்கு பாதகமான வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 23

## வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை

### 114 மி.மீ. மழை நேற்றுப் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 21

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கு அருகே ஒரு காற்றமுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். 07

## பலாலி வானூர்தித் தளத்தில் வெள்ளம் தேங்கி நிற்கிறதாம்

### தேர்தலுக்காக பணிகளை முடிவுறுத்தாது திறக்கப்பட்டதாக நாமல் ராஜபக்ச சாடல்



யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்று குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ச, அரசதலைவர் தேர்தலுக்காக வானூர்தி 23

## கோத்தா ஆட்சிக்கு வந்தால் காணிகளை விடுவிப்பாராம்

### இப்படிச் சொல்கிறார் முன்னாள் தளபதி ஹத்துருசிங்க

யாழ்ப்பாணம், ஒக். 21

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற்றால், காணிகளை விடுவிப்பார். அத்துடன் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் ஏற்படும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற் 23

## எகிறும் தேர்தல் செலவு

கொழும்பு, ஒக். 21

பிளாஸ்டிக் வாக்குப்பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு ஆராய்ந்து வருவதால், அரச தலைவர் தேர்தலுக்கான செலவினம் மேலும் அதிகரிக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு 07

## ஆறுமுக நாவலர் பன்னாட்டு வானூர்தி நிலையம் என மாற்றக் கோரிக்கை

### சிவசேனை முன்வைக்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்துக்குப்பன்னாட்டுவானூர்தி நிலையம் மீண்டும் வந்துவிட்டதே எனத் தமிழர்கள் மகிழ்கிறார்கள். தன் பயணங்களால் நாட்டுக்காக, மக்களுக்காக, கால்கள் தேய்ந்து, உடல் நலம் குன்றி வாழ்ந்த ஆறுமுக நாவலரின் பெயரே யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் பெயர் ஆகவேண்டும் என்று நினைக்கிறார்கள். 23

## நாட்டைப் பிரித்துவிட்டார்களா?

### வானூர்தி நிலையத் திறப்பு தொடர்பில் வேட்பாளர் சீலாரத்ன தேரர் சீறுகிறார்


கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம் வானூர்தி நிலையத்தை அமைத்துள்ளதன் மூலம் நாட்டை ஏற்கனவே பிரித்து விட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும், ஜனசெத பெரமுனவின் தலைவர் தலைவரான பத்தரமுல்ல சீலாரத்தன தேரர் 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்! 2019 – 2020

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,



**கலைகளில் பிரியம் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!**

எதிலும் புதுமையைப் புகுத்துபவர்களில் வல்லவர்களான நீங்கள், பொது உடைமைச் சிந்தனை அதிகம் உள்ளவர். நிறைகுறைகளை அலசி ஆராய்ந்து மற்றவர்களைத் துல்லியமாக கணிக்கும் நீங்கள் சிரமப்படுபவர்களைக் கைதூக்கியும் விடுவீர்கள்.

இதுவரை ஆறாம் வீட்டில் அமர்ந்து பல கஷ்ட, நஷ்டங்களைத் தந்து, உங்களைத் திணறடித்த குரு பகவான் 29.10.2019 முதல் 13.11.2020 வரை ராசிக்கு 7 ம் வீட்டில் அமர்ந்து உங்களின் ராசியை நேருக்கு நேராகப் பார்க்க இருப்பதால், எதிலும் உங்கள் கை ஓங்கும். வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொள்வீர்கள்.

வீண் சண்டை, விவாதங்களிலிருந்து ஒதுங்குவீர்கள். உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம், காதுகுத்து போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். திருமணம் தள்ளிப்போனவர்களுக்குக் கூடி வரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.




விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். சிலர் வங்கிக் கடன் உதவி கிடைத்து புது வீடு கட்டி குடிபுகுவார்கள். அரசாங்க விஷயங்கள் நல்லவிதத்தில் முடிவடையும். மனைவி உங்களுடைய புது முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார். அவரின் ஆரோக்கியம் சீராகும். மனைவிவழி உறவினர்களுடன் இருந்த மோதல்களும் விலகும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். அவருக்கும் எதிர்பார்த்த குடும்பத்திலிருந்த நல்ல பெண் அமைவார். இளைய சகோதரர் வகையில் மகிழ்ச்சி தங்கும். புது பதவிக்கு உங்களுடைய பெயர் பரிசலிக்கப்படும்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குருபகவான் உங்களின் லாப வீட்டைப் பார்ப்பதால் பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஷேர் மார்க்கெட் மூலமாக பணம் வரும். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

29.10.2019 முதல் 31.12.2019 வரை குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால், இக்காலக்கட்டத்தில் பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்களின் விரயாதிபதியும் பூர்வ புண்ணியாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால், பேச்சில் கனிவு பிறக்கும். குழந்தைபாக்கியம் கிடைக்கும்.

மகளுக்கு நல்ல வரன் அமையும். திடீர் பயணங்களால் உற்சாகம் அடைவீர்கள். வேற்றுமதத்தைச் சார்ந்தவர்கள் உதவுவார்கள். பெற்றோருடன் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். சிலர் வீடு மாறுவீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ம் பாதமான தனுசு ராசியில் செல்வதால் நெருக்கடிகளைச் சமாளிக்கும் சக்தி உண்டாகும். தைரியம் கூடும். அரசு காரியங்கள் விரைந்து முடிவடையும்.

**மகரத்தில் குரு பகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 8 ம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:**

7.07.2020 முதல் 30.7.2020 வரை உள்ள காலகட்டத்தில் உத்திராடம் 1 ம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் அரசு வகை காரியங்கள் இழுபறியாகும். 31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால் வெளியூர் பயணங்களில் கவனமுடன் சென்று வருவது நல்லது. ஓரளவு பணவரவு உண்டு. முன்னேற்றம் தடைப்படாது.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரத்தில் புதிய முதலீடுகளை இப்போது துணிந்துசெய்யலாம். இனிசிலசூட்சுமங்களையும், ரகசியங்களையும் தெரிந்துகொண்டு அதற்கேற்ப லாபம் ஈட்டுவீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். அயல்நாட்டிலிருப்பவர்களும் உதவுவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, பதிப்பகம், கட்டட உதிரிப் பாகங்கள், அரிசி மண்டி வகைகளால் நல்ல லாபம் கிடைக்கும்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**

உத்தியோகத்தில் புதிய உற்சாகம் பிறக்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். அதிகாரிகளுடன் அரவணைத்துப் போகும் மனப்பக்குவம் உண்டாகும். அவர்களின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப செயல்படத் தொடங்குவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமத [illegible]

**பெண்களுக்கு:**

பெண்கள் கூடுதலாக ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள்வார்கள். புதிய இடத்தில் வேலை கிடைக்கும். உயர்கல்வி, மேற்படிப்பு தொடர விரும்புபவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் சேர கடிதம் வரும். கல்யாணப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியும்.

**மாணவர்களுக்கு:**

மாணவ மாணவிகளுக்கு அவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும். வகுப்பறையில் அமைதி காப்புதுடன், படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விளையாட்டில் பரிசு பெறுவீர்கள்.

**கலைத்துறையினருக்கு:**

கலைத்துறையினருக்கு எதிர்பார்த்துக் காத்திருந்த வாய்ப்பு இப்போது கூடி வரும். வருமானம் உயரும். பிரபல கலைஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள். இந்த குரு மாற்றம் வாடியிருந்த உங்களை வளமைப்படுத்துவதுடன், வருங்காலத் திட்டங்களையும் நிறைவேற்றுவதாக அமையும்.

## பரிகாரம்:

வர இருக்கிற வருடங்கள் முழுவதுமே சனி பகவானின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக இந்த குரு பெயர்ச்சியில் சனி பகவான் 7,8 ஆகிய இடங்களில் சஞ்சாரம் செய்ய இருக்கிறார். இந்த சஞ்சாரம் உங்களுக்கு அதிக அளவில் எதிர்மறை தாக்குதல்களை தரலாம். இதில் இருந்து நீங்கள் விடுபட சனிப்பிரீதி செய்து கொள்வது நல்லது. அதாவது உடல் ஒத்துழைத்தால் சனிக் கிழமைகளில் நல்லெண்ணெய் ஸ்நானம் செய்யுங்கள்.

ராகு காலத்தில் துர்க்கைக்கு குங்கும அர்ச்சனை செய்வது கூட உங்களுக்கு நன்மை தரும். தடைகளை விலக்கும். இப்படியாக நீங்கள் சோதனைகளுக்குப் பரிகாரம் தேடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே சமயத்தில் 3 மொழி படங்களில் நடிக்கும் திரிஷா



தென்னிந்திய திரையுலகத்தில் கடந்த 17 வருடங்களாக நாயகியாக இருந்து வருபவர் திரிஷா. தமிழ், தெலுங்கில் பல முன்னணி நாயகர்களுடன் நடித்துள்ளார். கடந்த வருடம் வெளிவந்த '96' படத்துக்குப் பிறகு திரிஷா மீண்டும் முன்னணிக்கு வந்தார். அவர் தமிழில் நாயகியாக நடித்துள்ள நான்கு படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளன.

இந்த நிலையில் தெலுங்கில் சிரஞ்சீவி அடுத்து நடிக்கும் படத்திலும், மலையாளத்தில் மோகன் லால் அடுத்து நடிக்க உள்ள படத்திலும் திரிஷா கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளன.

மேலும், மணிரத்னம் இயக்கத்தில் உருவாக உள்ள 'பொன்னியின் செல்வன்' படத்திலும் திரிஷா நடிக்க உள்ளார் என்கிறார்கள். ஒரே சமயத்தில் மூன்று மொழிகளில் பெரிய படங்களில் நடிக்கும் வாய்ப்பு திரிஷாவுக்குக் கிடைத்துள்ளது.




1960ஆம் ஆண்டு யாழ்ப்பாண வானூர்தி நிலையம்

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

குழந்தைகள் மனப்பாட செய்யுள் ஒப்புவிக்கும் பொழுது.

அவர்களுக்குள் இருக்கும் ராஜாவும், ரகுமானும் ராகங்களுடன் வெளி வருவார்கள்!!

ச ப் பா ணி@manipmp

சொந்த ஊர் என்பது
சொந்த வீடு இருப்பதற்கான ஊர்

Hasan Kalifa @smhrkalifa

நம் தவறை சுட்டி காட்டுபவர்களை பார்த்து"நீ என்ன யோக்கியமா?என்று கேட்பதிலேயே நமது தவறை மறைமுகமா ஒத்துகொள்கிறோம்.

ச ப் பா ணி@manipmp

உடனே தைத்தால் ஒன்பது கிழிசலைத் தவிர்க்கலாம். **பழமொழி**



"6 மாசமா இந்த மருத்துவர்கிட்ட மருந்து எடுக்கிறேன்"
"ஏதும் முன்னேற்றம் இருக்கா?"
"நான் காரை வித்துட்டன். அவர் கார் வாங்கிட்டார்"

வானம் பொழிகிறது
பேருந்து ஒழுகுகிறது
ஏன் எடுக்க வேண்டும்
பயணக்கட்டணம்
அமர்ந்து பார்த்தாயா
நின்று பார்த்தாயா
மானங்கெட்டவனே
நனைந்துதான் போனேன்
வீணாய்போனவனே....



### இன்றும் தொடரும் யாழ்ப்பாணம் வானூர்தி நிலைய கலகலப்பு

"தம்பி இந்தியாவுக்கு ஒரு ரிக்கெற் போடும்... ஆம்பிள சீற்றா பொம்பிள சீற்றா அண்ணை? நான்தான் போறன்... ஆம்பிள சீற் புக் பண்ணும்"

"தம்பி... எனக்குக் கொஞ்சம் சத்தி வரும்... கோனர் சீற்றைத் தாறீரே?"

"இந்தப் ஃப்ளைற் முறிகண்டியில நிக்காதோ?"

"நாங்கள் புக் பண்ணின ப்ளைற்றில ஆக்கள் காணாதெண்டு எங்களை வேற ப்ளைற்றில ஏத்திப்போட்டான்..."

"ப்ளைற்றில பின்வரிசை குலுக்கமா இருக்குமாக்கும் என்ன?

"உங்கட என்ன ஏசி ப்ளைற்றோ, நொண் ஏசிப் ப்ளைற்றோ?

"எயார்ஹொஸ்டர் அக்கா:
இஞ்கார்... எல்லாரும் சாப்பிட என்னென்ன வேணுமெண்டு இப்பவே சொல்லிப்போடுங்கோ... பிறகு ஒவ்வொருக்காலும் என்னால வந்துகொண்டிருக்கேலாது...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1956



மறைவு 21 . 10 . 2018

J10812(16/17)

## பேரின்பநாதன் சாரததாதேவி

**அம்மாவுக்கு எங்கள் முதல் கடிதம்....**

மாதங்கள் பன்னிரெண்டு கடந்தாலும் - நம்
கண்ணில் ஈரம் இன்னும் குறையவில்லை அம்மா
அம்மா என்று அழைத்த வார்த்தைக்கு - இத்
தரணியில் ஏது நிகரம்மா இனி நமக்கு
மனம் இன்றும் வெம்பி அழுகின்றது அம்மா
உங்கள் பிரிவின் காரணம் தேடியே...

தனக்கென இருந்த ஒரு வாழ்க்கைதனை
பெற்றெடுத்த முன்று பிள்ளைகளுக்காய்
அர்ப்பணித்தாயே...
தாய் உருவில் தந்தை கடமை செய்து - தனக்குள்
தந்தை தாய் அன்பை புதைத்தவள் நீங்கள்
பாவப்பட்ட இவ்வுலகை போராடி - எம்மை
சொர்க்கத்தில் அல்லவா வாழ வைத்தீர்கள்.....
நீங்கள் சென்ற கனமே நாம் இதை
நரகம் என்று உணர்ந்து தவிக்கின்றோம்
அம்மா...

"அம்மா இருக்கின்றேன்" வேலை முடித்து வா
என்று அழைத்த இறுதி குரல் இன்று
ஒலிக்கிறது நம் காதில்
வேலை முடித்து தினம் வந்து நிற்கின்றோம்
நம்மை விட்டு எங்கு சென்றீர்கள் அம்மா....
வாழும் போதே பிள்ளைகளைக் காத்த நீங்கள்
மறைந்தும் நம்மை காத்து நிற்கின்றீர்கள்
மரணம் கூட தாய் அன்புக்கு அடிமையானதே....

பிறப்புகள் பல இருப்பினும் நாம் - எங்கள்
அம்மா மடியிலே பிறப்பெடுக்க வேண்டி
நிற்கின்றோம்.
உங்கள் மறைவு கனவாகி நினைவில்
வந்து நில்லுங்கள் அம்மா....
எங்கள் உடலில் கலந்த
உயிர் எங்கள் அம்மா....

**தாய் மடி ஏங்கும் பிள்ளைகள்**
**பிரசாந்தன் (யாழ்), துசிக்கா (கனடா), ருசாந்தன் (சுவிடன்)**

# ஆன்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 21.09.2019 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிதம்பரப்பிள்ளை திரவியம்




அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.10.2019) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 25.10.2019 முற்பகல் 11.30 மணியளவில் திவ்விய ஜீவன மண்டபத்தில் (நல்லூர் சட்டநாதர் கோயில் அருகில்) நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**51/6, விநாயகர் வீதி,**
**நல்லூர் வடக்கு.**
**077 1547507, 075 2679051**

**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
## வ. சுப்பிரமணியம்

(இலங்கை மின்சார சபை முன்னாள் உதவிப் பொது முகாமையாளர், இ.மி.ச. ஓய்வுதியர் நலன்புரிசங்கம், வடமாகாணம் முன்னாள் தலைவர், ஸ்தாபகர்)

அவர்கள் 19.10.2019 அன்று சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாளாத வேதனையை மாளாத துயரத்தோடு பகிர்ந்துகொள்ளும்**
**இ.மி.ச. வடமாகாண ஓய்வுதியர் நலன்புரிசங்கம்.**

(cs 28836) (13.17)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 . 05 . 1936



இறப்பு 06 . 11 . 2012

## அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்

*(ஓய்வு நிலை அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான் – J.P)*

**திதி : 21.10.2019 அபரபக்க அட்டமி**

ஆண்டுகள் ஏழான போதும்
ஆறவில்லை எம் துயரம்
அன்பென்னும் மழை பொழிந்து
அகிலத்தில் எம்மை வாழ வைத்து
கலங்கரை விளக்காய் காவல் தெய்வமாய்
எங்களை பாதுகாத்தீர்களே - அப்பா
உங்கள் பிரிவால் ஏங்குகின்றோம்

காலமெல்லாம் எம்மை காத்திருப்பாய்
என்றிருக்க கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ
ஆற்றொண்ணாத் துயரமது உள்ளத்தில்
ஊற்றாகி ஓடுதப்பா - பூமிதனில்
பலயுகம் கடந்தாலும் - உள்ளன்பை
என்றும் மறவோம் **அப்பா !**

*ஆத்மா சாந்திபெற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.*

(CS 28595)(14.17)

**" சண்முகதீபம் "**
**இல.43/4, கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 23 ஆவது பிறந்தநாளும்

## அழகராசா புவனநிதர்சன் (நிதர்சன்)

(யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவன்)



பிறப்பு 08.11.1996 இறப்பு 31.10.2018

செல்வ மகனே!
கோடி கோடி செல்வங்கள்
தேடித் தேடி வந்தாலும்
எம் அன்பு மகனே உன்போல்
ஆகிடுமோ நெஞ்சமெல்லாம்
நிறைவு தரும் அன்பான
திருவுருவம் முல்லை மலர்
விரிவது போல் உன் சிரிப்பு
சென்ற இடமெங்கும்
புகழ் சேர்த்த
உத்தமனே உன் பிரிவை
தாங்க முடியாமல் நீ ஆசையாய்
நட்டு வைத்த ரோஜாச் செடியும்
மண்மீது மடிந்து விட்டதையா
ஆயிரம் உறவுகள் அருகில்
இருந்தாலும் எம் அன்புச் செல்வமே
உன்னைப் போல் ஆகாதடா

நீ கையில் சுமந்த புத்தகங்கள்
கூட அநாதரவற்றுக் கிடக்குதையா
நீ மறைந்து ஓராண்டு சென்று
விட்டதையா ஓராயிரம் ஆண்டு
சென்றாலும் நீ எம்மோடு வாழ்கின்றாய்

**கற்பகமில் வீதி,**
**ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.**

(CS/28840) (11.17)

**என்றும் உம் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

மாநகரசபை எல்லைக்குள்
வீடு வாடகைக்குண்டு.

Contact No:- 077 924 3590



## காணி விற்பனைக்கு

A9 வீதி, கொடிகாமம் நாவலடிப் பாடசாலைக்கு அருகாமையில் 28 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தேவைக்கேற்ப பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 651 9028


## கல்விக்கண்காட்சி-2019
## யா/ஹாட்லிக்கல்லூரி

எமது கல்லூரியின் கல்விக் கண்காட்சி நேற்றும் (20.10.2019). இன்றும் (21.10.2019) நடைபெற்று வருகின்றது. இன்று திங்கட்கிழமை வடமராட்சி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் முற்பகல் 8.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை கல்லூரியில் பார்வையிட முடியும் என அறியத்தருகின்றோம்.

**அதிபர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை**

## பெறுகை அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட**
**அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)- 2019,**
**சபைநிதி வேலைத்திட்டம் - 2019**
**நகராட்சி மன்றம் - சாவகச்சேரி**

01. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தர முன்னுரிமை என்பன கருத்தில் கொள்ளப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2019.10.21ஆம் திகதியிலிருந்து 2019.11.04 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2019.10.21 ஆம் திகதியிலிருந்து 2019.11.04 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2019.11.04 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2019.12.23) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ருபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)– 2019 | | | | | | |
| NP/14/41(3)2/PSDG/04/2019 | வேதாந்த மடம் வீதி புனரமைப்பு கட்டம் - II, நுணாவில் மேற்கு. | 0.550 | 1 ½ மாதம் | C9/C8 | 5,500.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/PSDG/05/2019 | உழுத்தம்பலம் பிள்ளையார் கோயில் வீதி புனரமைப்பு, கோவிற்குடியிருப்பு. | 0.905 | 1 ½ மாதம் | C9/C8 | 9,100.00 | 2020.01.20 |
| சபைநிதி வேலைத்திட்டம் - 2019 | | | | | | |
| NP/14/41(3)2/CF/07/2019 | சாவகச்சேரி மரக்கறிச் சந்தை விரிவாக்கல் | 0.998 | 02 மாதம் | C9/C8 | 10,000.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/08/2019 | சாவகச்சேரி மரக்கறிச்சந்தை மழைத்தடுப்பு பிரிவிடல் | 1.428 | 02 மாதம் | C9/C8 | 14,300.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/09/2019 | கண்காணிப்பு கமரா பொருத்துதல் (சாவகச்சேரி பொதுச் சந்தை) | 1.000 | 01 மாதம் | பொருத்தமான வியாபார பதிவு | 10,000.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/10/2019 | கொல்கள வீதி புனரமைப்பு, கோவிற்குடியிருப்பு | 1.078 | 02 மாதம் | C9/C8 | 10,800.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/11/2019 | நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதி கட்டட திருத்தம். | 0.214 | 01 மாதம் | C9/C8 | 2,140.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/12/2019 | நகராட்சி மன்ற அலுவலக, சாவகச்சேரி பொதுநூலக கட்டட திருத்தம் | 0.937 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.01.20 |
| NP/14/41(3)2/CF/13/2019 | நகராட்சி மன்ற வருமானப் பகுதியில் அலுமாரி அமைத்தல் | 0.285 | 01 மாதம் | C9/C8 | 2,900.00 | 2020.01.20 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.10.28 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**2019.10.21**

## மரண அறிவித்தல்கள்

### தம்பித்துரை செல்வநாயகம்




தோற்றம் 23.02.1949 மறைவு 20.10.2019

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை செல்வநாயகம் நேற்று 20.10.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை பூரணம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் தவரத்தினம் தம்பதிகளின் மருமகனும் விக்னேஸ்வரியின் (வசந்தி) அன்புக்கணவரும் சுதாகரன் (ஊரெழு). ருசாந்தினி (ஆஸ்திரேலியா). மதனாகரன் (லண்டன்). ஐங்கரன் (இலங்கை ருகுணு பல்கலைக்கழகம் 4 ஆம் ஆண்டு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருந்ததி. கலைநேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தர்னிஷான் (ஊரெழு). பிரனேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான ஞானமணி. வர்ணலக்சுமி. சிற்றம்பலம். கிருஷ்ணபிள்ளை. சிவக்கொழுந்து. விஜயலட்சுமி மற்றும் குணலக்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற தவராசலிங்கம் (இலங்கை) மற்றும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்). சிவனேஸ்வரன் (இலங்கை). விமலேஸ்வரன் (சுவிஸ்). விக்கினேஸ்வரன் (சுவிஸ்).ஜெயந்தி (இலங்கை). சாந்தி (சுவிஸ்). சுகந்தி (ஆஸ்திரேலியா). ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2019) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**



### ஆறுமுகம் விசுவலிங்கம்

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விசுவலிங்கம் நேற்று **(20.10.2019)** ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 237, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி ஜெகதீசன் மகேஸ்வரி



தோற்றம் 13.02.1935 மறைவு 19.10.2019

யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதி. உடுவில் அம்மையார் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும். சோமராந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீசன் மகேஸ்வரி 19.10.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும். காலஞ்சென்ற சீனிவாசகம் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் மருமகளும். காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு. மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். கருணாகரன். சந்திரகரன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர் - வவுனியா). பாஸ்கரன். ரஜனி. சிறிதரன் (கனடா). இன்பகரன் (லண்டன்). சப்தகரன் (புகையிரத கட்டடப் பகுதி உத்தியோகத்தர். வவுனியா). திசாகினி. ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும். லோகநாயகி. சுவேந்திரா. சாந்தினி. மதிமலர் (மனோ - கனடா). ஜெயானந்தி (லண்டன்). காலஞ்சென்ற பபிதா. தவயோகராசா (குஞ்சு - உடுவில் பிரதேசசபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும். கார்த்திகன். மாதங்கி (ஆசிரியை). பிரிந்தா (தாதிய உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம்). கோகுலன். யாதவன். மிதுலா (பிரான்ஸ்). துவாரகா (ஆசிரியை - வவு/ பெரியகோமரசன்குளம் ம.வி). சஜீவன். நிசானி (கனடா). காலஞ்சென்ற ரதீசன் , விஷ்னா. லவண்ணியா (யாழ்.பல்கலைக்கழக மாணவி). ஜீவீந்திரன். தாட்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும். அத்விக். ஆயுஸ்மன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2019) செவ்வாய்க்கிழமை சோமராந்தோட்டம். உடுவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/28837)(11,17)

**தகவல் : குடும்பத்தினர்.**

**021 224 3568**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் பரப்புரையில் சு.கவினர் பங்கேற்கார்கள்

## தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

கோத்தபாயவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜய சேரக தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய வின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் சுதந்திரக் கட்சி உறுப் பினர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன் னணியின் ஆதரவளர்களால் அசௌக ரியங்களுக்கு உள்ளாகின்றனர். இந்த விடயம் குறித்து அந்தக் கட்சியின் தலை வர் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே இதற்கான தீர்வு வழங்கப்படும் வரை கூட் டங்களில் கலந்து கொள்ள முடியாது.

சுதந்திரக் கட்சியின் தனித்துவத் தன் மையை பாதுகாக்கும் வகையில் பொது மக்கள் முன்னணியுடனும் கோத்தபாய வுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் மூலமாகவே நாம் அவ ருக்கு ஆதரவளித்துள்ளோம்.

ஆகவே இவ்வாறான அதிருப்தியை ஏற் படுத்தும் செயற்பாடுகள் தவிர்த்துக் கொள்ள வேண்டியவையாகும் என்பதா லேயே இவ்வாறு அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஓ.5)

## கோரிக்கைகளை ...

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ் வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நியா யமான நிலைப்பாடுகள், அவர்களின் பிரச்சினைகள், அவர்களின் எதிர் பார்ப்பு என்பவற்றை உள்ளடக்கியதா கவே எமது 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தோம். எமது கோரிக்கை களை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளர் யாரோ அவர்களுடன் நாம் பேச்சு நடத் துவோம்.

எமது கோரிக்கைகளை உருவாக்கிய ஐந்து தமிழ் கட்சிகளும் இந்த வாரத்தில் கூடி ஆராயவுள்ளோம். நாளை மறுதி னம் நாடாளுமன்ற அமர்வுகள் இடம் பெறவுள்ள நிலையில் இந்த வாரத்தில் ஒரு தினத்தில் நாம் ஐந்து கட்சிகளும் கூடி ஒரு உறுதியான நிலைப்பாட்டை எட்டுவதுடன் அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

எம்முடன் பேச தயாராக உள்ள கட்சிக ளையும் சந்தித்து நிலைப்பாடுகள் குறித்து ஆராய்வோம். புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரே மதாச எமது கோரிக்கைகளை ஆராய்ந் துள்ளாரா என்று எமக்குத் தெரிய வில்லை. ஆனால் எம்முடன் பேச தயாராக உள்ளதாக அவர்கள் கூறியுள் ளனர். எனவே நாம் அவருடன் பேசுவ தற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள் ளது - என்றார். (ஓ.5)

## விடுதலைப்...

துக்கு மதில் கட்டுவதற்காக நேற்று மாலை அத்திபாரக் கிடங்கு வெட்டும் போது அதற்குள்ளிலிருந்து அவை தென்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தமிழீழ விடுத லைப் புலிகளின் சீருடைகள் மற்றும் சேட்கள் இரண்டையும் மீட்டுச் சென்ற னர். (ஓ.5,ரி3)

---

**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்**
**ஆதனப் பெயர்மாற்றம்**
**145, மூளாய் வீதி, வட்டாரம் - 04**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் - 04 மூளாய் வீதியிலுள்ள இல: 145 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **செல்லன் பத்மநாதனும்** பெண் சாந்தம்மாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6213/ 10.04.2010 ஆம் இலக்க உறுதியால் (**தியாகராஜா நடராஜா பெண் பூமாதேவி** ஆகியவருக்கு அவரது வழிப்பேர்த்தியாரான அடியற்று காலஞ்சென்ற சின்னத்தம்பி மகள் வள்ளியம்மை ஆகியவருக்கு பிரசித்த நொத்தாரிசு ச.கதிரவேலு முகதாவில் நிறைவேற்றப் பட்ட 5781/01.09.1918 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் சொந்தமாகவிருந்து அவர் காலஞ் செல்ல மாதாவழி முதுசமாக வந்தடைந்தது என வெளிப்படுத்தப்பட்டு) **தியாகராஜா நடராஜாவும் பெண் பூமாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **செல்லன் பத்மநாதனும் பெண் சாந்தம்மாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **செல்லன் பத்மநாதனும் பெண் சாந்தம்மாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(cs.28835) (13.17)

---

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில்
2019 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



| | | | |
|---|---|---|---|
| **1. க.விதோசன்** | **- 156** | **2. சி.சிந்துசன்** | **- 154** |
| 3. சு.சியானுஜன் | - 152 | 4. பா.டிசாந் | - 143 |
| 5. பி.சுதாகரன் | - 143 | 6. இ.கிசானா | - 135 |
| 7. க.தேனுஷன் | - 123 | 8. பா.தஸ்மிதா | - 121 |
| 9. த.வைஸ்ணவி | - 118 | 10. பி.சதுஷன் | - 98 |

மேற்படி எமது மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய அயராது உழைத்த ஆசிரியரையும், மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்திச் செல்கின்ற அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் : பெற்றோர்கள்**
**யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.**

---


**குற்றங்களைத் தடுப்போம்**

**பாதுகாப்பாக வாழ்வோம்**

நவீன தொழில் நுட்பமும் உத்தரவாதத்துடன் கூடிய கண்காணிப்புக் கமராக்கள்



கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து அவதானிக்கும் வசதி

Special Offer!

**Home CCTV Systems**
**AHD 4CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 4 Channel KKBRO
1x 1TB Hard Drive
4 x KKBRO 1.3MP Cameras
1x 100m BNC + Power cable
1x Power supply
Rs 29,900/-

**Home CCTV Systems**
**AHD 8CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 8 Channel KKBRO
1x 1TB Hard Drive
8 x KKBRO 1.3MP Cameras
1x 200m BNC + Power cable
1x Power supply
Rs 49,000/-




MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

021 222 5893 / 077 742 5973
077 396 3280 / 071 328 5260
218, Hospital Road, Jaffna.
email: jaffna@micropcsystems.com


---

**7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் சிதம்பரம் இராசலிங்கம் (J.P)**
(ஓய்வுபெற்ற ஊழியர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)



தோற்றம் 25.01.1934 — மறைவு 07.11.2012

குடும்பத்தின் குலவிளக்காய்
தரணியின் தலைவனாய்
சமூகத்தின் சேவகனாய்
தன்னலம் கருதாதவராய்
உயர்வைத் தந்தும்
உயிரைக் காத்த எம் தந்தையே
எம்மை விட்டுசென்று
- ஏழாண்டுகள் கடந்தாலும்
என்றும் நீங்காத நினைவுகளுடன்
எம் இதயத்தில் வாழ்வீரே
**உங்கள் ஆத்மசாந்திக்காகப்**
**பிரார்த்திக்கும்**
**குடும்பத்தினர்**

தற்காலிக முகவரி:
தேவாலய வீதி, சங்கானை.

நிரந்தர முகவரி:
V.C.C.மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

---

**9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 03 . 02 . 1942



மறைவு 21 . 10 . 2010

**திருமதி பொ.நித்தியானந்ததேவி**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அம்மாவே!
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அம்மா!

148, சேர்பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(CS/28833) (11.17)

என்றும் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

---

**மரண அறிவித்தல்**

தோற்றம் 20 . 01 . 1985



மறைவு 18 . 10 . 2019

**தேவராஜா ஏகலைவன்**

யாழ். மானிப்பாய் கட்டுடையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராஜா ஏகலைவன் 18.10.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராஜா - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும் கௌரியம்மா (கௌரி- இலங்கை), நாகராணி (சுமதி- சுவிஸ்), ஜெபநேசன் (அமலன்- லண்டன்), காலஞ்சென்ற தையல்நாயகி (தங்கா), மேரிதிரேசா (செல்வி- இலங்கை), யூதாததேயூ(ரூபன்- பிரான்ஸ்), தேவதர்சினி(தர்சினி- லண்டன்), பகீரதன் (பகி- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேந்திரம், தங்கவேல் (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), சாந்தினி (பிரான்ஸ்), பசில் (இலங்கை), கிரிதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நரேஸ், தனேஸ், டேனுஜா, சங்கீதா, சபேசன், சஞ்சீபன், கார்த்திகா, இவாஞ்சலின், டிலக்சினி, ஜக்சன், அபி மதுசன், தாரு, நவீன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திசாலி, அக்ஷரா, சம்யுக்தா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2019) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முழங்காவில் சோலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
[illegible]
முழங்காவில், கிளிநொச்சி (CS 28838)(14.17)

தகவல் : கிரிதாஸ் (கிரி - லண்டன்)
மைத்துனர்.
00447404280430

செல்வி (சகோதரி) 077 607 2859


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுளம்புகளை விரட்ட வீட்டிலேயே வழிமுறைகள்

- நுளம்பு உருவத்தில்சிறியதாக இருந்தாலும் அது எம்மைக்கடித்தால் ஏற்படும் பாதிப்புகள் பெரிதாக இருக்கும். அப்படிபட்ட நுளம்புகளை விரட்ட எமது வீட்டில் இருக்கும் பொருள்களே போதும்.
- தேங்காய் நார்கள் எம்மூர் கடைகளில் சுலபமாகக் கிடைக்கின்றன. அதை வாங்கி வந்து மாலை நேரங்களில் அதை எரித்து அதன் புகையை எல்லா அறைகளுக்கும் காண்பித்துவிட்டு, சிறிது நேரம் கழித்துப் பாருங்கள் ஒரு நுளம்புகூட வீட்டில் இருக்காது.
- கற்பூரத்தைக் கொண்டும் நுளம்புகளை விரட்டலாம். சல்பர் இருக்குமிடத்தில் ஒரு கொசுகூட இருக்காது. கற்பூரம் சல்பரினால் ஆனது. ஆனால் கற்பூரம் சுலபமாகக் காற்றில் உடனே கரைந்துவிடும். கற்பூரத்தைத்தட்டில்வைத்து கொளுத்திவிட்டு வீடு முழுவதும் அதன் புகையைக் காட்டினாலும் நுளம்புகள் ஓடிவிடும்.
- வீட்டின் ஜன்னல் பகுதிகளில் வெள்ளைப்பூண்டை நசுக்கிப் போட்டு வைத்தாலும் ஒரு நுளம்புகள் கூட உள்ளே வராது.
- பிளீச்சிங் பவுடரை தண்ணீரில் கலந்து நுளம்பு அதிகமாக உருவாகும் இடங்களில் தெளித்துவிட வேண்டும். இதனால் நுளம்புகள் உருவாகுவதைத் தடுக்கலாம்.
- வேப்பிலை அல்லது நொச்சி இலைகளை நெருப்பில் போட்டு வீடு முழுவதும் புகை போட்டால் நுளம்புகள் வீட்டுப்பக்கமே வராது.

## சிறுநீர் பாதையில் ஏற்படும் தொற்றுகளை தடுக்கும் உணவுகள்...!



சர்க்கரைவள்ளி கிழங்கை உணவில் சேர்த்துக் கொள்வதனால், சிறுநீர் பாதைதோற்றுநோயை எதிர்த்துப்போராடமுடியும். இதில்உள்ள ஊட்டச்சத்துகள் மற்றும் நோய் எதிர்ப்பு பாதுகாப்பு தரவல்லது.
கரட் உடல் நலத்தை மேம்படுத்தும் திறன் கொண்டது. மற்றும் சிறுநீர் பாதை தொற்றுகளை எதிர்த்து போராடும் குணம் கொண்டது.

மருத்துவநன்மைகொண்ட உணவுப்பொருளான இலவங்கப்பட்டையை உணவில் பயன்படுத்துகிறோம். இவை சிறுநீர் பாதை தொற்றுகளை ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டது.

தயிர் நச்சு கிருமிகளை எதிர்க்கும் தன்மைக் கொண்டதாகும். இது மீண்டும் சிறுநீர் பாதை தொற்று ஏற்படுத்தும் கிருமிகளை வராமல் தடுக்க உதவும்.

முள்ளங்கியை அதிகம் சாப்பிட்டால் வாயு பிரச்சினை ஏற்படும் என்று கூறுவார்கள். ஆயினும் இது, பல வகைகளில் சிறுநீர் பாதை தொற்று ஏற்படாமல் இருக்கவும், தொற்று கிருமிகளையும் அழிக்கப் பயன்படுகிறது.

உணவை தவிர, தண்ணீரும் சிறுநீர் பாதை தொற்றுகளை எதிர்த்து போராட உதவுகிறது. மற்றும் சிறுநீர்பாதையின் ஆரோக்கியத்தை அதிகரிக்க தண்ணீர் உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## நோய்களுக்கு பயனுள்ள சில வீட்டு மருத்துவக் குறிப்புகள்...!!

வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும், வெண்ணெயையும் கலந்து குடித்து விடுங்கள். சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

கொழு கொழுவென குண்டாக இருப்பவனுக்கு, உடல் இறுகி மெலிய, கொள்ளுப் பயறு கொடுக்க வேண்டும்.

வல்லாரைக் கீரையை நிழலில் காயவைத்து பொடித்து தினமும் ஒரு தேக்கரண்டி உண்டுவந்தால் நினைவாற்றல் பெருகும். கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும்.

எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். நுரையீரல்சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

எறும்புகள் போன்ற பல்வேறு பூச்சிகள் கடித்து வலி, வீக்கம் போன்றவை ஏற்பட்டால் வெங்காயத்தை நறுக்கி அந்த இடத்தில் தேய்க்கவும்.

எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

## வங்கக் கடலில்....

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. நேற்றைய தினம் பகல் வேளையில் மாத்திரம் 114 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 'ஏற்கனவே கனமழை கிடைத்து வருகின்ற இந்த நிலையில் இந்த தாழமுக்கம் வலுப்பெற்றால் அது வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்' என்று நா.பிரதீபராஜா குறிப்பிட்டுள்ளார்.


(ஒ.5.105)

## எகிறும்...

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அரச தலைவர் தேர்தலுக்கான மொத்த செலவினங்களை தேர்தல் ஆணைக்குழு இன்னும் இறுதி செய்யவில்லை என்று, தேர்தல் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.
அரச தலைவர் தேர்தலுக்கான மொத்த செலவினம், சுமார் 4 தொடக்கம் 4.5 பில்லியன் ரூபா வரை இருக்கும் என்று ஆணைக்குழு ஆரம்ப மதிப்பீடுகளை செய்திருந்தது. எனினும், தற்போது, தேர்தல் ஆணைக்குழு 7 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு திறைசேரியிடம் கோரியுள்ளது. 35 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் தேர்தலுக்கான செலவு அதிகரிக்கும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.
பிளாஸ்டிக் வாக்குப் பெட்டிகளுக்கு செல்ல வேண்டுமா, வேண்டாமா என்று ஆணைக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை, பிளாஸ்டிக் வாக்குப் பெட்டிகளுக்கு செல்ல முடிவு செய்தால், தேர்தலுக்கான செலவு மேலும் அதிகரிக்கும், என்றும் அவர் தெரிவித்தார்.
அதேவேளை, வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான மொத்த செலவு இன்னும் கணக்கிடப்படவில்லை என்றும், அரசு அச்சக திணைக்கள தலைவர் கங்கானி லியனகே கூறினார்.
காகித செலவு அதிகரித்துள்ளது. அச்சிடும் நேரம் அதிகரிக்கும். இதன் விளைவாக செலவும் அதிகரிக்கும் என்றும், எனினும், நவம்பர் 6 ஆம் திகதிக்குள் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணியை முடிக்க திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேசங்களின் பழைய பெயர்களும் புதிய பெயர்களும்

| பழைய பெயர்கள் | புதிய பெயர்கள் |
|---|---|
| • கோகன்ன, கோளரத | திருகோணமலை |
| • ஜம்புகோள பட்டினம் | காங்கேசன்துறை |
| • அநுராதபுர | அனுராதபுரம் |
| • தம்பன்னாவ | மன்னார் |
| • நாகதீப | நயினாதீவு |
| • ஊராதொட்ட | ஊர்காவற்றுறை |
| • கஜரகம | கதிர்காமம் |
| • செங்கடகல | கண்டி |
| • ஜம்புதெனிய | தம்பதெனிய |
| • சமந்தகூட | சிவனொளிபாதமலை |
| • கொலன்தொட்ட | கொழும்பு |







## விவசாயியின் கோபம்

கடவுளிடம்ஒருவிவசாயிகடுமையாகச் சண்டைக்குப் போனான். "உனக்குப் பயிர்களைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்த போது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால்பெரியதொந்தரவாக இருக்கிறது. பேசாமல், இந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடம் ஒப்படைத்துவிடேன்!" என்றான்.

கடவுள்உடனே, "அப்படியா? சரி. இனிமேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம்உன்கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய் விட்டார். விவசாயிக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அடுத்த விதைப்பிற்கான பருவம் வந்தது. "மழையே பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்ன போது, மழை நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதையைதூவினான். மழை,வெயில், காற்றுஎல்லாமேஅவன்சொன்னபேச்சைக்கேட்டன. பயிர்பச்சைப்பசேல்என வளர்ந்தது. வயல்வெளியைப் பார்க்கவே மிகவும் ரம்மியமாக இருந்தது. அறுவடைக் காலமும் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான்.

அதனைஉதிர்த்து, திறந்துபார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானியத்தைக் காணவில்லை, மிகச் சிறிய பதர்தான் இருந்தது. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு தானியக்கதிராக வெட்டி எடுத்து உடைத்துப் பார்த்தால் ஒன்றிலுமே தானியம் இல்லை. "ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப் பிட்டான். "மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில்தானேபயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர்கள் பாழாகிவிட்டதே, ஏன்?" எனக்கேட்டான். கடவுள் புன்னகைத்தார்:

"என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்றுவேகமாகவீசும். அப்போதுபயிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக் கொள்ளும் குழந்தைகளைப்போல பூமிக்குள்தங்கள்வேர்களைமிகஆழமாக அனுப்பிப் பிடித்துக்கொள்ளும். மழைகுறைந்தால், தண்ணீரைத்தேடி வேர்களை நாலாபக்கமும் அனுப்பும். போராட்டம் இருந்தால்தான் தாவரங்கள்தங்களைப்பாதுகாத்துக்கொண்டு, வலுவாகவளரும். எல்லாமேவசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்கு சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதளவென்றுவளர்ந்ததேதவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்கஅவற்றிற்குதெரியவில்லை!" என்றார்.

வேண்டாமய்யா, உன் மழையும் காற்றும்! நீயே வைத்துக்கொள்" என்று கடவுளிடமே அவற்றைத் திருப்பித் தந்து விட்டான் விவசாயி. பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும்போதுதான், உங்களின் திறமை அதிகரிக்கும். இருட்டு என்று ஒரு பிரச்சினை இருந்ததால்தான்மின்விளக்குகண்டு பிடிக்கப்பட்டது. பயணம்என்பதுபிரச்சினையானபோதுதான் வாகனம் உருவானது.

பிரச்சினைகளே இல்லாமல் இருந்து விட்டால் நம் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்? பிரச்சினை இல்லாத வாழ்க்கைதான் சபிக்கப்பட்ட வாழ்க்கை.. எதிர்பாராத திருப்பங் கள் தானேநம்வாழ்க்கையைச்சுவையாக அமைத்துத் தரமுடியும்...!!!



## சோளக்கொல்லை பொம்மையே!

சோளக்கொல்லைபொம்மையே
ஒத்தையிலே நிக்கிறியே
காரணமென்ன?

பயிர் விளைஞ்சு கிடக்குது
கதிர் முத்தி நிக்குது

காக்கை குருவி கொத்தாமல்
காவல் காக்கிறேன்!

வைக்கோல் போர் உடம்பில்
மண்ணு சட்டி தலையிலே

கண்ணு, மூக்கு மீசை உனக்கு
போட்டது யாரு?

நெட்டையான உருவம்தான்
கிடா மீசைக்காரர்தான்

காட்டை உழுது பாடுபடும்
பாசக்கார அய்யாதான்!

வெயிலடிச்சா காயறே
மழை பெஞ்சா நனையறே

வேதனையும் சோதனையும்
உனக்கு இல்லையா?
மனுஷன் போல ஆசையில்லை
மனக் கவலை ஏதுமில்லை

என்னைப் போல வாழ்ந்து பாரு
இன்பம் வந்து சேரும் பாரு!



தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சியே கல்வி. அது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டும்.

## அலெக்சாண்டர் கிரகாம் பெல்



அலெக்சாண்டர் கிரகாம் பெல் ஸ்கொட்லாந்தில் எடின்பேர்க்கில் 3 மார்ச் 1847 ஆம் ஆண்டு பிறந்தார்.

அறிவியலாளர், பொறியாளர், கண்டுபிடிப்பாளர், ஆசிரியர் மற்றும் அறிவியல் அறிஞர் ஆவார். தொலைபேசியைக் கண்டுபிடித்ததற்காக அறியப்படுகிறார்.

இவரது ஆய்வுகள் ஊடாக 1876 ஆம் ஆண்டு தொலைபேசி உருவாக்கப்பட்டது. இவர் பெல் தொலைபேசி நிறுவனத்தின் நிறுவனரும் ஆவார்.

பத்து வயதான போது அவருக்குப் பள்ளி செல்ல நாட்டமில்லாமல் போனது. இலத்தீன், கிரேக்க மொழிகளைப் படிப்பதைவிட பியானோ வாசிப்பதிலும், ஒலி அலைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதிலும் தனது நேரத்தைப் போக்கினார்.

1922 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அலெக்சாண்டர்கிரகாம்பெல்காலமானார். அவர் மறைந்த தினத்தன்று அமெரிக்காவில் உள்ள தொலைபேசிகள் அனைத்தும் [illegible] நிறுத்தப்பட்டு அஞ்சலி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கமும் நரகமும் மனிதரின் உருவாக்கம்



இந்துமதி

சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போலவருமா..? என்பது ஒரு தமிழ் சினிமாப் பாடலின் ஆரம்ப வரிகள். எம்மில் எவருமே சொர்க்கத்தைப் பார்த்ததில்லை. சொர்க்கத்துக்குச் சென்று திரும்பியவர்களும் எவருமில்லை. ஆனாலும் சொர்க்கம் தொடர்பாகப் பேசுவது குறைந்து விடவில்லை.

**சொர்க்கம் எங்குள்ளது?**

ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் எமக்கு மிகக் குறைவாகவே காணப்பட்டன. உயர் கல்வி கற்ற ஒரு சிலருக்கு மட்டுமே அங்கு செல்கின்ற வாய்ப்புக் கிட்டியது. அவர்கள் நாட்டுக்கு வரும்போது அவர்களை அதிசயமாகப் பார்க்கின்ற வழக்கத்தை எம்மவர்கள் கொண்டிருந்தார்கள். சொர்க்க வாசிகள் போன்றே அவர்கள் மதிக்கப்பட்டார்கள். நாட்டில் போர் ஆரம்பமானதன் பின்னர் அகதிகள் என்ற பெயருடன் தமிழர்கள் பெருமளவில் பிறநாடுகளைத் தஞ்சமடைந்தனர். அவர்கள் அங்கு உழைத்து அனுப்பிய பணம் இலங்கை நாணயத்தின் பெறுமதியில் பன்மடங்காகப் பெருகியது. இதனால் வெளிநாடுகளில் தஞ்சமடைந்தவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பெரும் பயனைப் பெற்றன. அது மட்டுமல்லாது வெளிநாட்டுக் குடும்பங்கள் என்ற



மதிப்பும் கிடைத்தது. இதனால் ஈர்க்கப்பட்ட பலர் எத்தனை சிரமங்கள் ஏற்பட்டபோதிலும் பணச் சலுகளையும் பொருட்படுத்தாது வெளிநாடுகளுக்குச் செல்லத் தலைப்பட்டனர். இன்று பல இலட்சம் தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இங்கே உள்ளவர்கள் அவர்கள் சொர்க்கத்தில் வாழ்வதாகக் கருதுகின்றனர்.

**குடும்பமே சொர்க்கம்**

ஆனால் சொர்க்கம் என்பது எமது மனதைப் பொறுத்தவிடயம் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். நல்லதொரு குடும்பம் எமக்கு அமைந்துவிட்டால் அதுவே எமக்கு உண்மையான சொர்க்கமாக மாறிவிடும். சிறுவயதில் அன்பாக அரவணைக்கின்ற பெற்றோர், பாசத்துடன் அன்பைச் சொரிகின்ற உடன்பிறப்புக்கள் கள்ளமில்லாமல் பழகுகின்றனர். உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் இருக்

**எமது நாடு சகல வளங்களையும் கொண்டது. குளிரான பிரதேசங்களும், வெப்பமான பகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. அருவிகளும், நதிகளுக்கும் இங்கு குறைவில்லை. செழிப்பான மண்வளம் நிறையவே உண்டு. கல்வியில் சிறந்த மக்களும் உள்ளனர். ஆனால் நாட்டில் அபிவிருத்தியைக் காண முடிய வில்லை.**

கும் போது நாம் சொர்க்கத்தை அங்கே காணமுடியும்.

தாம் பிறந்து வளர்ந்த கிராமங்களை விட்டு நகரங்களில் குடியேறுகின்ற வழக்கம் எம்மவர்களிடையே அதிகரித்து வருகின்றது. கிராமங்களில் கிடைக்காத வசதிகள் நகரங்களில் கிடைப்பதால் இவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். நாகரீக மோகத்தையும் இதற்கொரு காரணமாகக் கூற முடியும். ஆனால் நகர வாழ்க்கை அனைவருக்குமே சொர்க்கமாக மாறிவிடுவதில்லை. அங்கு சென்று செலவுகளைச் சமாளிக்க முடியாமல் துன்பங்களை அனுபவித்தவர்கள் பலர் உள்ளனர்.

நல்ல மனைவியும், அன்பும் திறமையும் கொண்ட குடும்பம் வாய்த்தபோதிலும் சிலர் தமது வாழ்க்கைய நரகமாக்கிக் கொள்கின்றனர். இவர்கள் சொர்க்கமென ஒன்று இருந்து அங்கே சென்றாலும் நரகத்தில்தான் உழல்வார்கள். இவர்கள் தமது குடும்பத் துக்கு மட்டுமல்லாது முழுச் சமுதாயத்துக்கும் உதவாத பிறவிகள்.

**நம்மூரைப் போலவருமா?**

போர் காரணமாகத் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தமது வாழ்க்கையைத் தொலைத்த பலர் எம்மிடையே வாழ்கின்றனர். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் தமது சொந்த இடங்களைக் காணாத நிலையில் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் ஒரு தொகுதியினருக்குத் தமது சொந்த இடங்களைப் பார்க்கின்ற வாய்ப்பும் கிடைக்கின்றது. அந்த வேளையில் அவர்கள் அடைகின்ற பரவசத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. காடு மண்டிக்கிடக்கின்ற தமது காணியைப் பார்க்கும் போது அழிந்து சிதைவதைந்து போய்க் கிடக்கின்ற தமது வீடுகளைப் பார்க்கும்போது தாம் பட்ட துயரங்கள் அனைத்தையும் அவர்கள் மறந்துபோய்விடுகின்றனர். சொர்க்கத்தைக் கண்டவர்கள் போன்று ஆனந்தத்தில் குதிக்கின்றனர்.

அந்த வேளையில் அங்கேதான் அவர்கள் சொர்க்கத்தைக் காண்கின்றனர். மனிதர்கள் தமது இயல்புக்கும், வசதிக்கும் ஏற்றவாறு வாழப் பழகிக்கொண்டால் வாழ்க்கை சொர்க்கமாக மாறிவிடும். அவர்கள் சொர்க்கத்தைத் தேடி வேறெங்கும் அலையவேண்டிய தேவையே இல்லை.

**இலங்கை என்னும் சொர்க்கம்**

எமது நாடு சகல வளங்களையும் கொண்டது. குளிரான பிரதேசங்களும், வெப்பமான பகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. அருவிகளும், நதிகளுக்கும் இங்கு குறைவில்லை. செழிப்பான மண்வளம் நிறையவே உண்டு. கல்வியில் சிறந்த மக்களும் உள்ளனர். ஆனால் நாட்டில் அபிவிருத்தியைக் காண முடிய வில்லை. ஏழ்மையான நாடு என்ற பின்னடைவையும் நாடு சுமந்து கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் என்ன காரணம் நாட்டு மக்கள் அனைவரையும் அரவனைத்துச் செல்லக்கூடிய தலைவர்கள் இங்கு உருவாகவில்லை இதனால் சொர்க்கமாகத் தெரிய வேண்டிய நாடு நரகமாக மாறிக் காணப்படுகின்றது. ஆகவே சொர்க்கமும் நரகமும் மனிதர்களால்தான் உருவாக்கப்படுகின்றன. அவர்கள் திருந்தாதவரை இந்த நியதியில் மாற்றம் ஏற்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொந்தளிக்கவேண்டியவர்கள் உண்மையில் தமிழர்கள்தான்

பலாலியில், யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் திறக்கப்பட்டதிலிருந்து தெற்கில் புதிய சர்ச்சை உருவாக்கப்பட்டுள்ளது. வானூர்தி நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு முதலிடமும், சிங்கள மொழிக்கு இரண்டாம் இடமும் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சர்ச்சை தொடக்கிவிடப்பட்டுள்ளது.

இந்தச்சர்ச்சையை வழமைபோன்று இனவாதத்தைகக்கும் விமல் வீரவன்சவே ஆரம்பித்து வைத்துள்ளார். சமூக வலைத் தளங்களிலும் இது எதிரொலிக்கின்றது. அரச மொழிக் கொள்கையை மீறி, தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுத்துவிட்டார்கள் என்று விமல் வீரவன்ச கொந்தளிக்கின்றார். தற்போது அரச தலைவர் தேர்தல் காலம் என்பதால், சிங்கள மக்களிடத்தில் இனவாதத் தீயை மூட்டி அவர்களை உசுப்பேத்துவதற்கு விமலுக்கு கிடைத்த ஆயுதம்தான், பலாலி வானூர்தி நிலையப் பெயர்ப் பலகை.

பலாலி வானூர்தி நிலையத்தில் மாத்திரமல்ல, வடக்கில் இருக்கின்ற அரச திணைக்களங்கள் எல்லாவற்றிலுமே தமிழ் மொழியில்தான் முதலில் எழுதப்பட்டிருக்கின்றது. இது சாதாரணமான ஒன்றாக இருந்து வருகின்றது. இது வரை காலமும் இதைப்பற்றி எவரும் கேள்வி எழுப்பவில்லை. ஏன் இவ்வளவு ஆக்ரோஷப்படுகின்ற விமல் வீரவன்ச, மகிந்த ஆட்சியில் வடக்கில் திறக்கப்பட்ட அரச திணைக்களங்களின் பெயர்ப் பலகைகளில் கூட தமிழ் மொழிக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டிருந்ததை மறந்து விட்டார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் முதலில் எழுதப்பட்டாலும் சிங்கள மொழியில் இரண்டாவதாக எழுதப்படுகின்றது. ஆனால் தென்னிலங்கையில் சிங்கள மொழியில் முதலில் எழுதப்பட்டாலும், தமிழ் மொழியில் ஆங்காங்கே சில இடங்களில் இரண்டாவதாக எழுதுகின்றனர். அதிலும் தமிழ்க் கொலைகள். இது தொடர்பில் பல ஆயிரம் முறைப்பாடுகள் இருக்கின்றன. மொழியைக் கொலை செய்வதற்காக உண்மையில் கொந்தளிக்க வேண்டியவர்கள் தமிழர்கள்தான்.

நல்லாட்சி அரசு அமைந்த பின்னர் இலங்கையின் சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது பெரும் பிரளயத்தை ஏற்படுத்த முனைந்தவர் விமல் வீரவன்சதான். தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டதால், தமிழீழம் மலரப் போகின்றது என்கின்ற அளவுக்கு பிரச்சினையை ஏற்படுத்தினார்.

விமல் வீரவன்சவின் இந்தக் கூத்துக்கள் எல்லாம் ராஜபக்ச அன்கோவின் அனுசரணையுடன்தான் அரங்கேறுகின்றது. அவர்களின் ஆசீர்வாதம் தாராளமாகக் கிடைக்கின்றது. ஆட்சியில் இல்லாத தரப்பாக அவர்கள் இருக்கும்போதே விமல் வீரவன்ச இந்த ஆட்டம் போடுகின்றார் என்றால், அவர்கள் ஆட்சிப் பீடம் ஏறிய மறு கணமே பலாலி வானூர்தி நிலையத்தின் பெயர்ப் பலகையில் மாற்றம் ஏற்படுவது நிச்சயம்.

இப்படிப்பட்ட தரப்புக்களுக்குத்தான் டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப் பெருமாள் ஆகியோர் ஆதரவு வழங்கியுள்ளனர். அவர்களை அரியணை ஏற்றுவதற்காக தலையால் நடக்கின்றனர். அரசமைப்பின் 16ஆவது திருத்தம் ஊடாக வடகிழக்கில் நிர்வாக மொழி தமிழ் என்பதை மறுதலிக்க விமல் வீரவன்ச எழுப்புகின்ற கூக்குரலுக்கு டக்ளஸ், வரதராஜப் பெருமாள் ஆகியோர் மௌனமாக இருக்கின்றனர். ஒரு கண்டனத்தைக் கூட வெளியிட முடியாமல் முடங்கியிருக்கின்றனர். தமது மொழி உரிமையைக் கூட கேட்டுப் பெற்றுத் தர முடியாதவர்கள்தான், நாளை அவர்களை ஆட்சியில் அமர்த்தி தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரப் போகிறார்கள்?

மொழியுரிமையைப் பறிக்கும் விமல் வீரவன்ச போன்றவர்களுக்கு எதிராகத் தமிழர்கள்தான் கொந்தளிக்கவேண்டும். ஆனால், இல்லாத ஒன்றை தேர்தல் பரப்புரைக்காக, சிங்கள மக்களின் வாக்குகளுக்காக விமல் வீரவன்ச தூண்டிவிட்டு சிங்கள மக்களை கொந்தளிக்க வைத்துள்ளார். இத்தகைய தரப்புக்கள் ஆட்சிக்கு வராமல் இருக்க தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்.

# புறம்தள்ளப்படுகின்ற நிலையில் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை!

■ சேரலாதன்

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களால் ஒழுங்கமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட பொது உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தமிழர் தரப்பின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பானவாகக் காணப்படுகின்றன.

**கட்சிகளின் கோரிக்கைகள்**

கூட்டு ஆட்சி முறையை ஏற்படுத்துதல், இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பன்னாட்டுப் பொறிமுறையிலான விசாரணைகளை மேற்கொள்ளல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குதல் வடக்குக் கிழக்கில் அரச மற்றும் தனியார் காணிகளில் நிலைகொண்டிருக்கும் படையினரை அங்கிருந்து அகற்றுதல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துதல், சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒத்தாசை புரிகின்ற மகாவலி அதிகார சபையின் நியாயாதிக்கம் ஒழிக்கப்படல், வன்னிப் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம் வனஉயிரினங்கள் உட்பட அரச திணைக்களங்கள் ஊடாக இடம் பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல், வெளிநாட்டுவாழ் இலங்கையர்களின் நேரடி முதலீடுகளை இலகுவாக்குதல், வடக்குக் கிழக்கில் வேலை வாய்ப்புக்களை வழங்கும்போது அங்குள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கல், வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியைக் கையாள்வதற்கு மக்கள் பிரதி நிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தல் என்பன அவையாகும். இவற்றுள் முக்கியமான விடயங்களுக்கு புதிய அரசதலைவர் மூன்று மாதங்களுக்குள் தீர்வு காண வேண்டுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தென்னிலங்கை அரசியல்வாதிகளால் கோரிக்கைகள் செவிசாய்க்கப்படாது**

தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் முக்கியமான பிரச்சினைகள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கோடிட்டுக் காட்டப்பட்டு 5 தமிழ்க்கட்சிகள் அவற்றை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆனால் தென்னிலங்கை இனவாதிகளால் இவை ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பதில்தான் சந்தேகம் நிலவுகின்றது. ஏனென்றால் தமிழ் மக்களுக்குச் சாதகமாக எதுவுமே நடந்துவிடக்கூடாது என்பதில் இவர்கள் மிகக் கவனமாக உள்ளனர்.

இனப்பிரச்சினை தீர்வு காணப்படாமல் இழுபட்டுச் செல்வதற்கும் இவர்களே காரணகர்த்தாக்களாக உள்ளனர். தமிழர்களால் தெரிவிக்கப்படுகின்ற அனைத்தையும் கண்மூடித்தனமான முறையில் எதிர்ப்பதுதான் இவர்களின் வேலையாகவுள்ளது. நீதி நியாயங்களை இவர்கள் அலசிப் பார்ப்பதில்லை.

பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சிக்கு முக்கியமான ஐந்து கட்சிகள் ஆதரவு தெரிவித்துக் கையொப்பமிட்டமை மிகப் பெரிய திருப்பமாகவே பார்க்கப்படுகின்றது. காலப் போக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இதில் இணைந்து கொள்ளுமென்ற நம்பிக்கை காணப்படுகின்றது. ஏனென்றால் தனிவழியில் சென்று முன்னணியால் எதையுமே சாதித்துவிட முடியாது.

அதுமட்டுமல்லாது தமிழர்கள் பிரிந்து செயற்படுவது இனவாதிகளுக்கு வாய்ப்பாகவே அமைந்துவிடும். ஆகவே தமிழர்கள் இனியாவது ஒன்றுபடுவதுடன் தமது கோரிக்கைகளை ஒரே குரலில் தெரிவிக்கவும் வேண்டும். ஆனால் இன்றுள்ள அரசியல் நிலவரங்கள் தமிழர்களுக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாது ஆட்சிப் பொறுப்பை ஏற்கப்போவது யார் என்பதையும் கணித்துக்கொள்ள முடிய வில்லை.

**தமிழர்களின் கோரிக்கைகளை விமர்சிக்கின்றார் கோத்தபாய**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை ஏற்கப்போவதில்லையென கோத்தபாய வெளிப்படையாகவே கூறிவிட்டார். அந்த அளவுக்கு ஐ.நா. சபை பலவீனமான நிலையில் உள்ளதா? படையினர் போர்க்குற்றங்கள் எதிலுமே ஈடுபடவில்லையெனக் கூறிவருகின்ற கோத்தபாய போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா தீர்மானத்தை ஏற்பாரென எவ்வாறு கூற முடியும்? அதுமட்டுமல்லாது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் அவர் புதிய வியாக்கியான மொன்றை வழங்கியிருக்கிறார். இதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கொதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை தமிழ் அரசியல் கட்சிகளின் எந்தவொரு கோரிக்கையையும் கோத்தபாய ஏற்றுக்கொள்ளமாட்டாரென கோத்தாவின் நெருங்கிய சகாவான விமல் வீரவன்ச கூறியுள்ளார். இந்த நிலையில் கோத்தா தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவாரெனத் தமிழர்கள் காத்திருப்பதில் எவ்வித பயனும் கிடைக்கமாட்டாது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பெரும்பான்மையின மக்களின் வாக்குகளையே அதிகம் நம்பியிருக்கின்றனர்.

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகள் கிடைத்தால் தமது வெற்றி உறுதியாகி விடுமென்பதால்தான் அந்த வாக்குகளையும் எதிர் பார்க்கின்றனர்.

ஆனால் தமிழர்கள் பெரும்பான்மையினத் தலைவர்களால் மட்டுமே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

தேர்தல் நெருங்கிவரும் வேளையில் இரண்டு முக்கிய வேட்பாளர்களும் தமிழர்களுக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு தமது இனத்தைச் சேர்ந்த மக்களின் வாக்குகளை இழப்பதற்குத் துணிய மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகும் பனிமலைகள் உலகுக்கு எச்சரிக்கை



உலக வெப்பமயமாதல் பற்றியும், பருவநிலை மாறுதல்கள் பற்றியும் பன்னாட்டு அளவில் கூடிக்கூடிப் பேசிக்கொண்டே இருக்கிறோம். சுற்றுச்சூழல் மீதான விழிப்புணர்வு மட்டுமல்ல, பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் உடனடித் தேவை. கரிப்புகை வெளியீட்டையும் பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றத்தையும் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். அனைத்து நாடுகளும் ஒன்றுசேர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டால், பெருங்கடல்களின்நீர்மட்டம்2100ஆம் ஆண்டுக்குள் மேலும் 40 செ.மீ உயரும். இந்த விடயத்தில் அலட்சியம் காட்டினால் 80 செ.மீ வரை நீர்மட்டம் அதிகரிக்கும்.

1900ஆம் ஆண்டுகளிலிருந்து கடல் நீர்மட்டம் சராசரியாக 16 செ.மீ உயர்ந்துள்ளது. பனி உறைந்து காணப்படும் கிரீன்லாந்து, அன்டார்டிகா பகுதிகளில் பனி அதிகமாக உருகத் தொடங்கிவிட்டதால் கடல் நீர்மட்டம் ஆண்டுதோறும் 1.8 மி.மீ உயர்ந்துவருகிறது. இப்போது பனி உருகும் வேகமும், கடல் நீர்மட்டம் உயரும் அளவும் வேகம்பெற்றுள்ளது.

அதிர்ச்சியளிக்கும் அறிக்கைகள்

பருவநிலைமாறுதல்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்பவை அச்சுறுத்தும் எச்சரிக்கைகள் அல்ல. கண் முன் நிகழ்ந்துகொண்டிருக்கும் நடைமுறை உண்மைகள். பெருங்கடல்கள், துருவப் பகுதிகளின் பனிமண்டலங்கள், மிக உயர்ந்த மலையின் பனிபடர்ந்த போர்வைகள் போன்றவை புவி வெப்பமடைவதால் உருவாகும் வெப்பத்தின் விளைவுகளால் பாதிப்படையத் தொடங்கிவிட்டன. அனைத்துப் பெருங்கடல்களும் சூடேறி வருகின்றன, புவியின் பனிப்பாறைகள் நொறுங்கிவருகின்றன.

பருவநிலை மாறுதல் பற்றி ஆராய ஐக்கிய நாடுகள் சபை அமைத்த அரசுகளுக்கு இடையிலான குழு (ஐபிசிசி) உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் உதவியுடன் பருவநிலைத் தரவுகளைத் திரட்டி, தொடர்ந்து ஆராய்ந்துவருகிறது. 1990ஆம் ஆண்டில் தொடங்கி இதுவரை 5 ஒட்டுமொத்தமான அறிக்கைகளைத் தயாரித்தது. இப்போது ஆறாவது அறிக்கையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு 3 விடயங்கள் குறித்து அறிக்கைகளைத் தயாரித்தது ஐபிசிசி. முதலாவது அறிக்கை, புவியின் வெப்பநிலை இப்போது இருப்பதைவிட 1.5 டிகிரி செல்சியஸ் உயர்ந்ததை எச்சரித்ததோடு, பேரழிவுகள் ஏற்படும் என்றும் எச்சரித்தது. இரண்டாவது அறிக்கை, நிலங்கள் மீதும் வனங்கள் மீதும் புவி வெப்ப அதிகரிப்பு ஏற்படுத்திய பாதகங்களையும், ஏற்படுத்தவிருக்கும் சேதங்களையும் விவரித்தது. இப்போது வெளியாகியிருக்கும் மூன்றாவது அறிக்கை, பெருங்கடல்களும் பனிப்போர்வைகள், பனிமுகடுகளும் எப்படி இதைத் தாங்குகின்றன என்பதை விவரித்தது.

**இந்த வேகம் போதாது**

இந்த அறிக்கைகள் அனைத்துமே எதிர்காலத்தில் புவி கடுமையான சோதனைகளைத் தாங்க வேண்டியிருக்கும் என்பதையே உணர்த்துகின்றன. காரணம், புவி வெப்பநிலையை 2 டிகிரியோ, 1.5 டிகிரியோ குறைப்பது அப்படியொன்றும் சுலபமான செயல் அல்ல. 2050ஆம் ஆண்டுக்குள் எல்லா நாடுகளும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை முழுதாக இல்லாமல் செய்தால்தான் 1.5 டிகிரி அளவுக்குக் குறைக்க முடியும். ஆனால், சமீபத்திய ஆய்வுகளோ புவி மேலும் 3.5 டிகிரி வெப்ப அதிகரிப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று எச்சரிக்கின்றன.

உலக நாடுகளின் தலைவர்கள் பருவநிலை மாறுதல் தொடர்பாக ஆலோசனை நடத்த 2015ஆம் ஆண்டில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கூடினார்கள். தொழில் புரட்சி தொடங்குவதற்கு முன்னால் இருந்த புவி வெப்பநிலையை மீண்டும் ஏற்படுத்தினால் மட்டுமே உலகைக் காப்பாற்ற முடியும் என்று ஒப்புக்கொண்டார்கள். சராசரியாக ஆண்டுக்கு 2 டிகிரி செல்சியஸ் வெப்பத்தைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். குறைந்தபட்சம் 1.5 டிகிரி செல்சியஸாவது குறைக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

2 டிகிரி செல்சியஸ் குறைக்க வேண்டும் என்றாலே, அனல் மின் நிலையங்கள் உட்பட பல்வேறு தொழில் உற்பத்தியைக் குறைத்தாக வேண்டும். அது அந்தந்த நாடுகளின் பொருளாதார உற்பத்தியைக் கணிசமாகக் குறைத்துவிடும். அந்தப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளைக் கண்டாக வேண்டும். இருந்தாலும், மக்களிடம் விளக்கி அவர்களுடைய ஒத்துழைப்புடன் புவி வெப்பத்தைக் குறைத்தால்தான் உலகுக்கு நேரவிருக்கும் கடுமையான விளைவுகளைத் தடுக்க முடியும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால், இதற்கிடையில் வெப்பம் சராசரியை விட ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரித்துவிட்டது. ஆர்க்டிக் போன்ற துருவப் பகுதிகளில் 4 டிகிரி வரையிலும்கூட அதிகரித்திருக்கிறது. பனிப் பிரதேசங்களும் பெருங்கடல்களும் பருவநிலை மாறுதலால் பாதிக்கப்பட்டு, தோற்ற மாறுதல்களை அடைந்துவருகின்றன.

**பேரழிவின் பிடியில்**

துருவப்பகுதிகளிலும் உயரமான மலைகளிலும் உள்ள பனிப்பாறைகள் உருகி நீராகப் பெருகுகின்றன. வெப்பமண்டல நாடுகளில் கடலில் பலத்த புயல்கள் உருவாகின்றன. கடல் சூடாகிக் கொதிக்கும்போது வளிமண்டலத்தில் ஈரப்பதம் அதிகரித்து வலுவான சூறாவளிகள் தோன்றி பெருமழையாகப் பெய்கிறது. மனிதர்களால் உணரப்படாத பல மாற்றங்களும் கடல்பரப்பில் ஏற்படுகின்றன. கடலின் மேற்பரப்பு நீர் கொதிநீரானதும் அதன் அடர்த்தி குறைகிறது. அது கடலின் கீழ்மட்டத்தில் உள்ள உயிர்ச் சத்துகள் நிறைந்த குளிர் நீருடன் கலக்காமல் பிரிகிறது. எனவே, மேற்பரப்பு நீர் அப்படியே தேக்கமடைகிறது. அதில் ஒக்சிஜன் குறைவாக இருப்பதால் கடல்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் உயிர்வாழ முடியாமல் தவிக்கின்றன. உலகின் பவளப் பாறைகளில் 30 வீதமானவை நெருக்கடியில் சிக்கிவிட்டன. எஞ்சியவற்றில் 60 வீதமானவை அழியும் நிலைக்குச் சென்றுவிட்டன. 2100ஆம் ஆண்டுக்குள் கடலடி பவளப் பாறைகளில் 70 வீதம் முதல் 90 வீதம் வரையில் அழிந்துவிடும். புவி வெப்பமடைவது 2 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால் இவற்றின் அழிவு 99 வீதம் வரை உயர்ந்துவிடும்.


இந்தப் பவளப் பாறைகளின் அடியில்தான் சிறு மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகள் இனப்பெருக்கம் செய்கின்றன. அவற்றையே உண்கின்றன. இந்தப் பவளப் பாறைகள் கடலில் உள்ள உயிரினங்களை மட்டுமல்ல் கடலோரம் வசிக்கும் மக்களையும் புயல், சூறாவளி காலங்களில் கடல் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி கரையில் அதிக சேதம் ஏற்படாமலும் காக்கின்றன. கடலில் பவளப் பாறைகளில் பிறக்கும் மீன்கள் மனிதர்களுக்கு உணவாகின்றன. கடலின் மீன்பாடு பவளப்பாறைகள் இல்லாவிட்டால் வற்றிவிடும்.

இந்நிலை நீடித்தால், இந்நூற்றாண்டின் இறுதியில் கடலிலிருந்து கிடைக்கும் மீன்பாடு அளவு மேலும் 20 வீதம் குறைந்துவிடும். இப்போது சூனா போன்ற மீன்கள் கடல்பரப்பில் கிடைப்பது அரிதாகிக்கொண்டிருக்கிறது. கடலில் இருக்கும் மீன்களை ஆழ்கடல் மீன்பிடிக்கப்பல்கள் உதவியுடன் பெரிய வலைகளைக் கொண்டு பிடிப்பது அதிகரிப்பதால், கடலில் மீன்களின் இருப்பு வேகமாகக் குறைந்துகொண்டிருக்கிறது. கடல் சூடேறுவது அவற்றை மேலும் வற்றவே செய்யும்.

**என்ன செய்ய வேண்டும்?**

1970ஆம் ஆண்டுகள் முதலே பசுங்குடில் வாயு வெளியேற்றங்களின் 90 வீத அளவைப் பெருங்கடல்கள்தான் தாங்கி வருகின்றன. பருவநிலை மாறுதலின் தீய விளைவுகள் நிலப்பகுதிகளில் வாழ்வோரைப் பாதித்துவிடாமல், பெருங்கடல்களும் பனிப்பிரதேசங்களும் காத்து வருகின்றன. இவை இரண்டும் இல்லாவிட்டால் புவியின் சராசரி வெப்பநிலை இப்போது உள்ளதைவிட மேலும் 1 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கும்.





'ஐபிசிசியின் அறிக்கையானது உலக நாடுகள் அனைத்தும் உரிய நேரத்தில், ஒருங்கிணைந்து, நீண்டகாலத் தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்று வலியுறுத்துகிறது. உலகின் சுற்றுச்சூழல், வன உயிரினங்கள், எம்முடைய குழந்தைகளுக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய இந்த உலகம் ஆகியவற்றின் நிலைமை மேம்படுவதற்காகவே இதைச் செய்தாக வேண்டும்' என்கிறார் ஐபிசிசி அமைப்பின் துணைத் தலைவர் கோ பேரட். வெப்பநிலையைக் குறைக்க உலக நாடுகள் அனைத்தும் ஒரே சமயத்தில் தீவிரமாக நடவடிக்கை எடுத்தால்தான் விளைவுகளைத் தடுக்க முடியும். பேரழிவுகளைக் குறைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக். 21
கரணவாய், கிழக்கு கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் நவராத்திரி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் கலை நிகழ்வுகள், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான க.வர்சா, செ. காவியன், பி.வர்சி, நி. நிதுசன் ஆகியோர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், முதிய வர்கள் மதிப்பளிப்பு, தேசிய தமிழ்த் தின குறுநாடக ஆக்கப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுக் கொண்ட மாணவி கிருஸ்ணதாசன் காதம்பரி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.
கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத் தலைவர் தி. கணேசன் திருமாலழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வச் ஜோதி தவராசா, வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் கந்தர் பொன்னையா, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரத்னசிறி, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை ஓய்வுநிலை அலுவலர் ரவிச்சந்திரிகா யோகராசா, சனசமூக நிலையத்தினர், மக்கள் கலந்து கொண்டனர். (க-160)

### யாழ். நீதிமன்றக் கட்டடம் மீது தாக்குதல்

# 35 பேருக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுகள்

*யாழ்ப்பாணம், ஒக். 21*

**யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் 4 ஆண்டுகளின் பின்னர் 35 சந்தேகநபர்களுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

2015 ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைக்கு நீதிகோரி யாழ்ப்பாணம் நகரில் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பங்கேற்றவர்கள், அந்த வழக்கின் முதன்மைச் சூத்திரதாரி எனக் குறிப்பிடப்பட்ட சுவிஸ் குமாரை யாழ்ப்பாணம் நீதிமன்றுக்குள் வைத்துள்ளதாகத் தெரிவித்து அதனை சூழ்ந்து கொண்டனர்.
இதன் போது சிலரால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. நீதிமன்ற வளாகத்தைச் சூழ களேபரம் ஏற்பட்டதால், பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து கண்ணீர்ப் புகைத் தாக்குதல் நடத்தப்பட்டு நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு கட்டம் கட்டமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் 72 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வந்தது.
அதில் 35 பேருக்கு எதிராக நீதிமன்றக் கட்டடம் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் சிறைச்சாலை வாகனத்தைத் தாக்கியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழும், ஏனையோருக்கு எதிராக பொலிஸ் அலுவலர்களைத் தாக்கியமை, யாழ். நகரில் பொலிஸ் காவலரணைத் தாக்கிச் சேதப்படுத்தியமை மற்றும் சிறைச்சாலை மீது கல் எறிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.
"நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. எனினும் அந்த வழக்கை முடிவுறுத்துவதில் பொலிஸார் அக்கறையின்றி இழுத்தடிக்கின்றனர். எனவே பொலிஸார், சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ய வேண்டும்.
அதுவரை சந்தேகநபர்கள் மன்றில் முன்னிலையாகத்தேவையில்லை. மீளவும் அழைப்புக் கட்டளை வரும் போது, மன்றில் முற்படவேண்டும்" என்று 2018ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
இந்த நிலையில் வழக்குக் கோவை சட்ட மா அதிபர் திணைக்களத்தால் பெறப்பட்டு குற்றச்சாட்டுக்களை சாட்சிகள், சான்றாதாரங்கள் ஊடாக நிரூபிக்கக் கூடிய சந்தேகநபர்களுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டவிரோதக் கூட்டம் கூடியமை, நீதி அமைச்சுக்குச் சொந்தமான நீதிமன்றச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, சிறைச்சாலைக்குச் சொந்தமான சொத்துக்குச் சேதம் விளைத்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இதனடிப்படையில் குற்றப்பத் திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேகநபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அன்றைய தினம் நீதிமன்றில் சந்தேகநபர்களுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-37)

## ஓ.எல். மாணவர்களுக்கு இரு பாட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 21
க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடச் செயலமர்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
செயலமர்வில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய் சென்றான்ஸ் பாடசாலை மாணவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் மூன்றாம் அணி மாணவர்களால் செயலமர்வு நடத்தப்பட்டது. (க)



## சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலர்களுக்கு செயலமர்வு

சாவகச்சேரி, ஒக். 21
வடக்கு மாகாண நீதிமன்றங்களில் இயங்கும் சமுதாயஞ்சார் சீர்திருத்த அலகுகளின் அலுவலர்களுக்கான செயலமர்வு தென்மராட்சி பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கிய நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயலமர்வு தென்மராட்சிப் பிரதேச சமுதாயஞ்சார் சீர்திருத்த அலகின் அபிவிருத்தி அலுவலர் க.ரஜனிகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. செயலமர்வில் நிறுவன தேசிய இயக்குநர் சி.ஜெயராஜ், சமுதாயஞ்சார் சீர்திருத்த அலகின் மூத்த அலுவலர் எம்.ஏ.எம் அனஸ், வளவாளர் வி.பிரான்சிஸ், நிறுவன வடக்குமாகாண இணைப்பாளர் வினித்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (க-9,159)

## துரித கிராமிய திட்டங்களை முடிவுறுத்த காலஅவகாசம்

சாவகச்சேரி, ஒக். 21
தென்மராட்சிப் பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட துரித கிராமிய அபிவிருத்தித் திட்ட வேலைகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தி, அதற்குரிய கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.
வீதிச் சீரமைப்புக்கள், வீதிக்கு விளக்குகள் பொருத்துதல், பொது அமைப்புக்களின் கட்டடங்கள் நிர்மாணித்தல், தளபாடங்கள், மின்வசதிகள், முன்பள்ளிகள், பாடசாலைகளில் சீரமைப்பு வேலைகள், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு இந்தத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சிக் கல்வி, நீர்ப்பாசன கமநல சேவைகள் நிலையம், பிரதேச செயலகம் போன்றவற்றால் மேற்கொள்ளவென சுமார் 500 க்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களுக்கு 2 மில்லியன் ரூபா வரையிலான நிதி ஒதுக்கீடு செய்திருந்தனர்.
இந்த வேலைகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தி அதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# சிறுமியுடன் தகாத உறவு இளைஞனுக்கு மறியல்

### உடந்தையாக இருந்த பெண்ணுக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 21
வலிகாமம் பகுதியைச் சேர்ந்த பதின்ம வயது மாணவி ஒருவரை, அவரது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து அழைத்துச் சென்று தகாத உறவில் இருந்தார் என்ற குற்றச்சாட்டில் 19 வயது முஸ்லிம் இளைஞன் மற்றும் அவருக்கு உடந்தையாகவிருந்த பெண் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.
19 வயது இளைஞனுக்கும், 15 வயது நிரம்பிய மாணவிக்கும் காதல் ஏற்பட்டு, இருவரும் பெண்ணின் உறவினர் வீடொன்றில் தங்கியிருந்துள்ளனர்.
அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மாணவியின் பெற்றோர் முறைப்பாடு செய்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மாணவியையும், இளைஞனையும் யாழ்ப்பாணம் நகரிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்டனர். மாணவி மருத்துவ சோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இளைஞனும், அவருக்குத் தங்குமிடம் வழங்கி உடந்தையாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.
இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார். அத்துடன், எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இளைஞனையும், பெண்ணையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவ சோதனைக்கு உட்படுத்த நீதிவான் உத்தரவிட்டார். (க-37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் முதன்முதல் ஐஸ் போதைப்பொருள் சிக்கியது

## இருவர் கைது

முல்லைத்தீவு,ஒக்.21
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் முதலாக ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று புதுக் குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்த னர். குறித்த பகுதியில் போதைப்பொ ருள் வியாபாரம் இடம்பெறுவதாக இராணுவப் புலனாய்வாளர்கள் கொடுத்த தகவலுக்கு அமைவாக, புதுக்கு டியிருப்புப் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது இருவரும் கைது செய்யப்பட்டனர். புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலை



யப் பொறுப்பதிகாரி எம்.எ.அமரசிங்க தலைமையிலான, குற்றத்தடுப்பு பிரிவுபொறுப்பதிகாரி வி.எம்.பண்டார, உதவி பொறுப்பதி காரி அல்லீஸ் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று, பேருந்தில் ஏறுவதற்காக காத்திருந்த இருவரையும் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 28 அகவையுடைய நபர் ஒருவரும், கல் முல்ல,வெல்லம்பிட்டியப் பகுதியைச் சேர்ந்த 40 அகவையுடைய நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (க-ரி3)

## பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிப்பு



கொடிகாமம்,ஒக்.21
போக்கட்டி றோ.க.த.க பாடசாலையின் தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் பாடசாலை மண் டபத்தில் கடந்த வாரம் நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம் பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. திருக்குமரன், தென்மராட்சி வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான சி.சிவதாசன், ந.திருவாசகன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற இ. கனிஸ்ரன் (164), ஜெ.அபினா (160) ஆகியோருக்கு அதிபர் ஈருருளிகளை வழங்கி வைத்தார்.
அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த 10 மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (க159)

## மீனவ அமைப்பினருடன் மக்கள் பிரதிநிதிகள் சந்திப்பு



முல்லைத்தீவு,ஒக்.21
முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு மீனவர் அமைப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் பிரதிநிதிகள் மீனவர்களைச் சந்தித்தனர்.
முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதிக் கடற்தொழிலா ளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது.
மீனவர்களுக்கான தொழில் உபகரணங்கள், விளை யாட்டு மைதான சீரமைப்பு, .வீதிவிளக்குப் பொருத்து தல்,விவசாய வீதிகள் சீரமைத்தல், நந்திக்கடல் நீர் ஏரிக்குச் செல்லும் வீதிகள் சீரமைத்தல் மற்றும் பொது மயானம் சீரமைப்பு போன்ற கோரிக்கைகளை மீன வர்கள் முன்வைத்தனர்.
சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற சந் திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் வினோநோதராதலிங்கம், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்கள், புதுக்குடியிருப்புப் பிர தேச சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-ரி3)

### தவறான முடிவெடித்து குடும்பத் தலைவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஒக்.21
தவறான முடிவெடுத்து 10 மாதக் குழந்தையின் தந்தை ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டார்.
இந்தச் சம்பவம் கச்சாய் தெற்கு கொடி காமத்தில் இடம்பெற் றுள்ளது.
மதுபோதையில் வந்த மருமகன், மகளைத் தாக்கிய போது அத னைத் தடுக்கச் சென்ற மாமியாரின் தலைமயி ரைப்பிடித்து இழுத்துச் சென்று அத்திவாரத்து டன் மோதியுள்ளார்.
அதனால் அவருக்குக் முகத்தில் காயமேற்பட் டது.
இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப் பட்டவர் முறைப்பாடு செய்து விட்டு மருத்துவ மனைக்குச் சென்றுள்ளார்.
காலையில் அவர் வீடு திரும்பிய போது மருமகன் மரத்தின் உச்சியில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகா மம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (க-9)

### மானிய உரம் நாளை விநியோகம்

சாவகச்சேரி, ஒக்.21
சாவகச்சேரி நகர் கமக் கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உர வகைகள் நாளை செவ்வாய்க்கி ழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மீசாலை புத் தூர் சந்தி கமநல சேவை கள் நிலை யத்தில் வழங் கப்படும். அமைப்பின் அங்கத்தவர்கள் உரிய பொருள்களுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு அமைப் பின் தலைவர் உ.பரம நாதன் அறிவித்துள் ளார். (க-9)

### கந்தசஷ்டி விரத சிறப்பு வழிபாடு

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பா ணம் சரவணை பள்ளம்புலம் முரு கமூர்த்தி ஆல யத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக் கம் சிறப்பு வழிபாடுகள் இடம்பெ றவுள்ளன. தொடர்ந்து நவம்பர் மாதம் 3ஆம் திகதி திருக்கல்யாண நிகழ்வு டன் கந்தசஷ்டி விரதம் நிறைவடையும். (ஐ)

# சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

சுன்னாகம் ஒக்.21
ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் அதிபர் க.கெங்காதர மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் ஆசியுரையை துர்க்காதேவி ஆலயத் தலை வர் கலாநிதி ஆறுதிருமுகன் வழங்கினார்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் க.இளங் கோவன்,சிறப்பு விருந்தினராகப் பட்டயக்கணக்காளர் ஓய்வுநிலை திறைசேரி பொதுமுயற்சிகள் பணிப்பாளர் நாயகம் நிதி ஆணைக்குழு உறுப்பினர் வே.கனகசபா பதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாண வர்களுக்கான பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கப் பட்டன. தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பித்து ஓய்வு பெற்ற அதிபர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களும் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.
நிகழ்வில் நூற்றாண்டு விழாவுக்கான இறுவெட்டும், நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டன. (ஐ-104)



கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம் கிளையின் சமூக வேலைத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் 10 கணினிகளுடன் கூடிய உபகரணங்கள், தளபாடங்கள், அச்சு இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது. வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரா.சிவஞானம், யாழ்.கிளையின் மூத்த முகாமையாளர் அ.ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

# வர்த்தகர்களுக்கு ரூ.19,500 தண்டம்

கொடிகாமம்,ஒக்.21
சாவகச்சேரி பிரதேசத்தில் காலாவதியான பொருள் கள் வைத்திருந்த வர்த்தகர் களுக்கு 19 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக் கப்பட்டது
[illegible]ச் சேர்ந்த 3 வர்த்தகர்களுக்கு எதி ராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு கள் தாக்கல் செய்யப்பட் டன.
வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்த கர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண் டம் விதிக்கப்பட்டது.
காலாவதியான முகப்பூச்சு பவுடர் , எயார் பிறஸ், டெற்றோல் ஆகிய காலாவ தியான பொருள்களை வைத்திருந்த மூன்று நபர் களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதமும், காலாவதி யான விம் பவுடர் வைத்தி ருந்த நபருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தினத்தில் இசை ஒலிக்க தடை விதித்த பாடசாலை அதிபர்

## இடமாற்றம் கோரி ஆசிரியர்கள் வலயத்தில் முறைப்பாடு

மன்னார், ஒக். 21

மன்னாரில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் ஆசிரியர் தினத்தில் நிகழ்வில்இசைஒலிக்கவிடுவதற்கு, அதிபர்தடைவிதித்தமையால், தொடர்ந்தும் அதே பாடசாலையில் பணியாற்ற விருப்பம் இன்மை நிலவுவதாக 16 ஆசிரியர்கள் வலயம் ஊடாக மாகாணத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

500 மாணவர்கள் கல்வி கற்கும் குறித்த பாடசாலையில் 48 ஆசிரியர்கள் உள்ளனர்.

48 ஆசிரியர்களில் 18 தமிழ் ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். அதே நேரம் குறித்த பாடசாலையில் 15 தமிழ் மாணவர்களே கல்வி கற்கும் நிலையில், சரஸ்வதி பூசை மேற்கொள்ளவும், அதிக மாணவர்கள் வேற்றுமதம்என்றகாரணம்காட்டப்பட்டு 2016 ஆம் ஆண்டுடன் தடுக்கப்பட்டு, கடந்த 3 ஆண்டுகளாக நவராத்திரி பூசைகள் இங்கு இடம் பெறுவது கிடையாது.

இந்த நிலையில் இந்த ஆண்டு மாணவர் மன்ற ஏற்பாட்டில் தமிழ்த் தாய் வாழ்த்து ஏற்பாடு செய்யப்பட்ட சமயமும் அதிபரால் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடஅனுமதிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்த நிலையில் குறித்த நிகழ்வுக்குப் பொறுப்பான ஆசிரியர் அதனைக் கண்டித்து நிகழ்வை நிறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பாடசாலையில் எஞ்சியிருந்த இரு நிகழ்வுகளாக ஆசிரியர் தினமும், சிறுவர் தினமும் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில், ஆசிரியர் தினத்திலும் எந்தவொரு இசையும், நடனமும் இடம் பெறக் கூடாது என்று அதிபர் அதற்கும் தடை ஏற்படுத்தியுள்ளார்.

இதன்காரணமாக ஆசிரியர்கள் தாம் தொடர்ந்தும் இன்னுமோர் மதத்தின் கீழ் அடிமைப்பட்டு பணிபுரிய விரும்பவில்லை. குறித்த நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். அல்லது தம்மைப் பிற பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும்என்றுமுன்னறிவித்தல் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)



## வவுனியா பூந்தோட்டத்தில் முதியவர்கள் மதிப்பளிப்பு

வவுனியா, ஒக். 21

பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு வவுனியா பூந்தோட்டத்தில் முதியவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

பூந்தோட்டம் சிறி லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நிகழ்வு இடம்பெற்றது.

பூந்தோட்டம் முதியோர் சங்கத் தலைவர் சி.சு.கோணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்கள் நரசிம்மர் ஆலயத்தில் இருந்து மாலை அணிவித்து மண்டபம் வரை அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. முதியோர்கள் மாலை அணிவிக்கப்பட்டு, பொன்னாடையும் போர்த்தி, நினைவுச்சின்னங்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், வடமாகாணசபை உறுப்பினர் முன்னாள் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் பா.பிரசன்னா, சமூகசேவைகள் அலுவலர் எஸ்.ஶ்ரீனிவாசன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-110)

## முதியோர் தின நிகழ்வு

வவுனியா, ஒக். 21

பன்னாட்டு முதியோர் தின நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சின் செயலர் இராஜரட்ணம் வரதீஸ்வரன் கலந்துகொண்டார்.

முதியோர் விழிப்புணர்வு நடைபவனியுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

தொடர்ந்து முதியவர்களின் கலை, கலாசார, நாடக நிகழ்வுகள் அத்துடன் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தால் முன்னர் நடத்தபட்ட முதியோர்களுக்கிடையிலான போட்டிநிகழ்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-110)

# நெசவுத் தொழிற்சாலை தர்மபுரத்தில் திறப்பு

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சிm தர்மபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட நெசவுத் தொழிற்சாலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சிவில்பாதுகாப்புதிணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2 மில்லியன் ரூபா செலவில் இந்த நெசவுத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு, அதற்கான உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. அதேவேளை மறுவாழ்வளிக்கப்பட்ட 3ஆயிரத்து 200 முன்னாள் போராளிகளுக்கு நிரந்தரமான அரச வேலை வாய்ப்பும் திணைக்களத்தால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. தையல், நெசவு, பின்னல் அலங்காரம், பண்ணை வேலைகள், விவசாயம், முன்பள்ளி ஆசிரியர் பணி போன்ற பணிகளில் உள்ளவர்களுக்கு சிவில் பாதுகாப்பு பிரிவினரால் மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது என்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (க-70)



## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

முல்லைத்தீவு, ஒக். 21

தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பிரதேச சபை பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன.

சித்திரம், ஒட்டுச்சித்திரம், நுண்ணறிவும் பொது விவேகமும் உள்ளிட்ட போட்டிகள் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கும், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 41 முன்பள்ளிகளைச் சேர்ந்த 82 முன்பள்ளி மாணவர்களிடையே கதைகூறும் போட்டியும், பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை, வாசிப்பு, சித்திரப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதேவேளை, தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதி புதுக்குடி யிருப்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறவுள்ளது. (க-ரி3)

## நால்வருக்கு தண்டம்

கொடிகாமம், ஒக். 21

மேலதிகமாகக் கள் வைத்திருந்த நான்கு பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்றால் 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தால் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று நபர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-159)

றெஜினா படுகொலை வழக்கு

# சந்தேக நபர்கள் மூவரின் மறியலை 3 மாதங்களுக்கு நீடிக்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 21

சுழிபுரம் மாணவி சிவனேஸ்வரன் றெஜினா படுகொலைக் குற்றச்சாட்டு வழக்கின் சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியலை 3 மாதங்களுக்கு நீடிக்கும் விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில்தாக்கல்செய்யசட்டமா அதிபர்திணைக்களம்நடவடிக்கை எடுத்துள்ளது.

சுழிபுரம்rnகாட்டுபுலம்அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவனேஸ்வரன் றெஜினா (வயது 6) என்ற சிறுமி அந்தப் பகுதி தோட்டக் கிணற்றிலிருந்து 2018 ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

பாடசாலைக்குச் சென்று திரும்பிய மாணவியைக் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டு சடலம் கிணற்றுக்குள்போடப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சந்தேகநபர்கள் தொடர்ச்சியாக ஒரு வருடத்துக்கு மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கான விளக்கமறியலைநீடிக்கும்அதிகாரம் மேல் நீதிமன்றுகே உள்ளது.

அதனால்சிறுமிபடுகொலைவழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நிறைவடையாத நிலையில், சந்தேகநபர்கள் மூவரினதும் விளக்கமறியலை மேலும் 3 மாதங்களுக்கு நீடிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விண்ணப்பம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. (க-37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுவிலிக்குளம் மைதானத்தின் கட்டுமானப் பணிகள் நிறுத்தம்

### பல மில்லியன் ரூபா நிதி வீண் விரயம் எனக் குற்றச்சாட்டு

மன்னார்,ஒக்.21

நறுவிலிக்குளத்தில் அமைக்கப்பட்ட மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், பல மில்லியன் ரூபா நிதி வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது என்று விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டியுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் விளையாட்டுத்திறனை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ், மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் நீச்சல் தடாகம், பார்வையாளர் அரங்கு, ஓடுதளம் போன்ற நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு 2017ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டது.

விளையாட்டு மைதானத்துக்கான கட்டட வேலைகளில், மைதானத்தில் ஓடு பாதைக்கான கிடங்கு வெட்டும் பொது பழைய காலத்து மட்பாண்டங்கள் வெளியே வந்தமையால், தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும் என்று கூறி கட்டுமானப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

மைதானத்திலும் அதனைச் சூழவுள்ள சில பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது.

குறித்த பகுதிகளில் சான்றுப் பொருள்கள் எதுவும் கிடைக்காமையால் இந்த வருடம் ஆரம்பத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் விளையாட்டுத்துறை அமைச்சிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தது.

ஆனால் இன்றுவரை இந்த விளையாட்டு மைதானத்தை மீள் கட்டுமானம் செய்யும் எந்தவொரு நடவடிக்கைகளையும்

அரச அதிகாரிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ எடுக்கவில்லை.

இது தொடர்பில் விளையாட்டு வீரர்களும், சமூக ஆர்வலர்களும், பொது அமைப்புகளும் தொடர்ந்தும் தெரியப்படுத்தி வந்தபோதும் எவரும் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன வசதிகள் கொண்ட மன்னார் மாவட்டத்தின் அரும் பெரும் சொத்தாக விளங்கக் கூடிய விளையாட்டு மைதானம் இன்று வனாந்தரமாகக் கைவிடப்பட்டு, பழங்காலத்துக் கட்டடங்கள் போல் காட்சியளிக்கிறது.

அத்துடன் ஏனைய மாவட்டங்களுக்கு வரும் அபிவிருத்தி நிதிகள் அபிவிருத்திச் செயற்பாடுகளில் வரும் தடங்கல்களை வெற்றி கொண்டு அவை செய்து முடிக்கின்ற போதும், மன்னார் மாவட்டத்தில் மட்டுமே அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டு இருப்பதுடன், பெருமளவிலான நிதிகள் திறைசேரிக்கே திரும்பிச் சென்று விடுவதாகவும் பொதுஅமைப்பினரும் மற்றும் மக்களும் தெரிவிக்கின்றனர்.

மூன்று வருடங்கள் நிறைவு பெறும் நிலையில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளமையால், மழையில் கம்பிகள் துருப்பிடித்து, கட்டடங்களும் சிதைவுகள் ஏற்படும் நிலமை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் நறுவிலிக்குளத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டப் பொது விளையாட்டு மைதானத்தை மீள் கட்டுமானம் செய்து, மாவட்டத்தில் விளையாட்டுத்துறையையும், வீரர்களையும் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்களும் பொது அமைப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-213)



## அதிக பனி மூட்டத்தால் வாகன சாரதிகள் அவதி

வவுனியா,ஒக்.21

வவுனியாவில் நேற்று காலை அதிகளவான பனி மூட்டமான காலநிலை நிலவியதால், சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்தனர். வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 8 மணி வரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக வேலைக்குச் செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

ஏ-9 வீதி உட்பட, ஏனைய வீதிகளால் சென்ற வாகனங்கள் காலை 8 மணி வரை வாகனத்தின் ஒளியைப் பயன்படுத்தியே பயணம் செய்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-110)

## கிளிநொச்சியில் இளைஞர் முகாம்



கிளிநொச்சி,ஒக்.21

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' எனும் தொனிப் பொருளிலான இளைஞர் முகாம் கிளிநொச்சி சின்மயாமிஷன் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரமச்சாரி சைதன்யா, பொறியல்துறை விரிவுரையாளர் காங்கேயன், கரைச்சி பிரதேச சபை செயலர் சண்முகதாசன், ஓய்வுபெற்ற ஆசிரியரும் சமூக சேவையாளருமான சிவஞானசுந்தரம் ஆகியோர் கருத்துரையாற்றினர். ஆன்மிக உரை, கருத்துக்கள், நாடகம், விழுமிய விளையாட்டுக்கள், பல்லூடக செயலரங்கு உள்ளிட்ட நிகழ்வுகளில் இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர் என்று பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா தெரிவித்துள்ளார். (சு)

## மூதாட்டி சடலமாக மீட்பு

முல்லைத்தீவு,ஒக்.21

தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் பகுதியைச் சேர்ந்த, நடராசா கமலாதேவி (வயது-70) என்பவரே அவரது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

மருத்துவ அறிக்கையில் குறித்த பெண் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சு-ரி3)

## முதியவர்கள் அனுபவத்தின் பொக்கிசம் அவர்களே இளைஞர்களுக்கு வழிகாட்டி

### சிவமோகன் எம்.பி. அறிவுரை

மன்னார்,ஒக்.21

முதியோர்கள் அனுபவத்தின் பொக்கிஷங்கள். அவர்களே இளைஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

பன்னாட்டு முதியோர் தினத்தில் முதியோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு வவுனியா பூந்தோட்டம் நரசிம்மர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இன்றைய இளையோர்கள் முதியவர்களின் சொல் கேட்பதில்லை. அவர்களின் சொல்லைக் கேட்டு நடந்தால் இழப்புக்கள், ஏமாற்றங்களில் இருந்து இளைய சமுதாயம் தப்பித்துக் கொள்ளும்.

இன்று முதியவர்களாக இருப்பவர்கள் அவர்களது இளமைக் காலங்களில் விவசாயம் செய்தவர்கள். அவர்களின் விவசாய உத்திகள் மாற்றப்பட்டதாலேயே இன்று விவசாயிகள் இழப்புக்களையும், பாதிப்புக்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

அப்போதைய நெல்லினங்கள் நான்கடிக்கும் அதிகமான உயரம் கொண்டவை. அதிக வறட்சியையும் மழைவெள்ளத்தையும் தாங்கக் கூடியவை. இன்றைய நெல்லினங்கள் கொஞ்சம் அதிகமான வெயிலில் வாடியும் மழையில் அழுகியும் விடுகிறது. கதிரின் தலைப்பகுதி உணவுக்கும், நடுப் பகுதி கால்நடைகளின் உணவுக்கும், அடிப்பகுதி வயல்களின் உரத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டன. ஓர் அரிவு வெட்டு நடைபெற்றால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன. இன்று சீனாவின் இயந்திரத்தைக் கொண்டு வந்து வயல் வெட்டி விவசாயிகளின் இலாபங்களையும் வெட்டு மெஷின் காரன் கொண்டு செல்கின்றனர். இந்த நிலமையில் கொஞ்சம் மாற்றங்களை ஏற்படுத்தி நமது முன்னோர்களின் அறிவுரைகளையும் கேட்டு விவசாய செய்கையை மேற்கொண்டால் விவசாயிகளுக்கு எந்தப் பிரச்சினையும் வராது- என்றார். (சு-213)

## வெங்காய வெடியில் சிக்கிய காட்டு யானை உயிரிழப்பு

முல்லைத்தீவு,ஒக்.21

வெங்காய வெடியில் சிக்கிப் பாதிக்கப்பட்ட காட்டு யானை நேற்று முன்தினம் உயிரிழந்தது. முல்லைத்தீவு, உடையார் கட்டு இருட்டுமடுப்பகுதியில், மக்களின் விவசாய நிலங்களுக்குள் புகுந்து நீண்டகாலமாக அட்டகாசத்தில் ஈடுபட்ட வந்த யானை, வெங்காய வெடியில் சிக்கிப் பாதிக்கப்பட்டிருந்தது. யானையின் வாயில் வெங்காய வெடி வெடித்ததில், காயமடைந்து காயம் அழுகிய நிலையில், உணவு உண்ண முடியாத நிலையில் மீண்டும் மக்கள் வாழிடங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வந்தது.

குறித்த யானை மூங்கிலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் உயிரிழந்து கிடந்தது. அதனை வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

யானையின் உடலம் கிராம அலுவலகர்கள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் புதைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி
# அ.த.க பாடசாலையில் வசதிகளின்றி கற்றல்!

கிளிநொச்சி,ஒக். 21

நாட்டில் பல்வேறு கல்வி அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது.

ஒரு பாடசாலைக்கு இருக்க வேண்டிய பல்வேறு பௌதீக வளங்களைக் குறித்த பாடசாலை இழந்துள்ளது. கிராமப்புற பாடசாலை என்பதால் புறக்கணிக்கப்பட்டுள்ளதா எனும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகஅப்பகுதிமக்கள்தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையின் வகுப்பறைகள் தரம் பிரிக்கப்படாது காணப்படுகின்றன. தறப்பாள் கொண்டு வகுப்பறைகள் தனித்தனியே பிரி க்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்றக்கூடியவகையில் அவர்களின் இருக்கைகள்,தளபாடங்கள் கற்றலுக்கு உகந்ததாகவோ,சுதந்திரமான கல்விக்கான வசதியாகவோ காணப்படவில்லை. பாடசாலையில் நூலகம், அழகியற்கூடம், கணினிஅறை உள்ளிட்ட வசதிகளற்ற நிலையில் பாடசாலை இயங்கி வருகிறது என்று பாடசாலை மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த பாடசாலையில் விளையாட்டு துறையில் சாதிக்கக்கூடிய மாணவர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களால் சாதனை நிலைநாட்ட முடியவில்லை.

உடற்கல்வி ஆசிரியர் பாடசாலையில் இல்லாத அதேவேளை விளையாட்டு மைதானமும் சீரின்றிக் காணப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு துறைகளில் சாதிக்கக்கூடிய மாணவர்கள் இவ்வாறான வள பற்றாக்குறை காரணமாக மழுங்கடிக்கப்படுகின்றனர் என்பதே அப்பகுதி மக்களின் ஆதங்கமாக உள்ளது. இதே வேளை, குறித்த பாடசாலையின் குறைபாடுகள் தொடர்பில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயப் பெண்கள் குழுக்களால் ஆராயப்பட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் இதுவரை அதற்கான தீர்வு கிடைக்கவில்லை என்று கவலை தெரிவித்தனர். குறித்த பாடசாலை தொடர்பில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் நேரில் பார்வையிட்டு பௌதீக வள பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு முன்வர வேண்டும் என்று அப்பிரதேச மக்களும், மாணவர்களும் எதிர் பார்க்கின்றனர். (ஐ-6)

## பாடசாலை மாணவரிடையே உளநலம்சார் போட்டிகள்

கொடிகாமம்,ஒக்.21

உளநலம்சார் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே ஓவியம்,கவிதை,கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் உளநலப்பிரிவால் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஆரம்பப் பிரிவு, தரம் 6 தொடக்கம் 11 வரையான பிரிவு, உயர் தரப்பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளன.போட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள் வலயக்கல்விப் பணிமனையூடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளுக்கான ஆக்கக்களை நாளைக்கு முன்னர் சமர்பிக்க வேண்டும். சிறப்பான ஆக்கங்கள் அனைத்துக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலதிக விவரங்களை பாடசாலை அதிபர்கள் மற்றும் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவித்துள்ளனர். (்-159)

## இந்திய இழுவைப் படகின் உரிமையாளர் மன்னார் நீதிமன்றில் முன்னிலையானர்

மன்னார்,ஒக்.21

மன்னார் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப் படகின் உரிமையாளர் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்று மன்னார் நீதிமன்றில் முன்னி லையானார். இராமேஸ்வரத்திலிருந்து 7 மீனவர்கள் கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி பாக்குநீர் கடற்பரப்புக்குள் மீன் பிடியில் ஈடுபட்டபோது, படகுக்கான எரிபொருள் முடிந்தமையால் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைய நேரிட்டதாகத் தெரிவித்தனர். படகுடன் ஏழு மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மறுநாள் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தனர்.

அன்று மன்னார் நீதவான் நீதிமன்றில் மீனவர்கள் முற்படு த்தப்பட்டனர். அவர்கள் விளக்கம றியலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற வழக்கு விசார ணையில், இந்திய மீனவர்கள் தங்கள் குற்றங்களை நீதவான் முன்னிலையில் ஒப்புக் கொண்டனர். ஏழு மீனவர்க ளையும் மிரிகானா முகாமூடாக தாய்நாட்டுக்கு அனுப்பி வைக்க நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

வழக்கு விசாரனையில் படகின் உரிமையாளருக்கு நீதிமன்றால் அழைப்பாணை விடுக்கப்பட்டதை அடுத்து, படகின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை நீதி மன்றில் முன்னிலையானார். காலநிலை சரியற்ற நிலையில் இருந்தமையாலும் படகு இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்துள்ளதாக இந்திய மீனவர்களால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் விசாரணை மூலமே அதனை எண்பிக்க முடியும் என்று எதிர்வரும் 25 ஆம் திகதி வழக்கை நீதிவான் ஒத்திவைத்தார். (க60)

## முதியோர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு, தொல்புரம் மத்தி சர்வோதய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். சர்வோதய இணைப்பாளர் கி.நடராசா தலைமையில் நிகழ்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க63)

## வாசிப்பு மாத போட்டிகள் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி,ஒக்.21

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தால் மாணவர்களுக்கிடையே சித்திரம், கட்டுரை வாசிப்பு பேச்சு ஆகிய போட்டிகள் நாளை தொடக்கம் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் மீசாலை பொது நூலக மண்டபத்தில் ஆரம்பப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என்று ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

நாளை ஐந்து பிரிவுக ளுக்குமான சித்திரப் போட்டிகளும், புதன்கி ழமை ஆரம்பப் பிரிவு தவிர்ந்த ஏனைய நான்கு பிரிவுகளுக்கும் கட்டுரைப் போட்டிகளும், 24 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு தரம் 4 மாணவர்களுக்கு பொது அறிவும் நுண்ணறிவும் போட்டியும், 26 ஆம் திகதி ஆரம்பப் பிரிவு தரம் 2 மாணவர்களுக்கு வாசிப்பு போட்டியும், தரம் 5 மாணவர்களுக்கு பேச்சு போட்டியும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ9)

## பயிலுநர் நியமன விவகாரம் விவரம் ஆணைக் குழுவுக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.21

பயிலுநர் செயல்திட்ட உதவியாளராக நாடு பூராகவும் நியமிக்கப்பட்ட 7 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்ட நியமனத்தை அரச தலைவர் தேர்தல் ஆணைக்குழு தடுக்க கூடாது என்று பயிலுநர்கள் விடுத்த கோரிக்கையின் பெயரில் ஆணைக்குழு கோரிய விவரங்க ளைமாவட்டச்செயலகங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளன.

நாடு பூராகவும் உள்ள கிராம சேவகர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில், தேசிய ரீதியில் க.பொ.த உயர் தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிப்ப தற்காக, கடந்த ஜூன் மாதம் முதல் கொழும்பில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி 7 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டனர்.

நியமிக்கப்பட்ட பயிற்சிக் காலத்துக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படும் என்று வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில், புதிதாக நியமனம் கிடைத்தவர்கள் மிகவும் ஆவலாக மாவட்டச் செயலகங்களில் தமக்கான கடமைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

எனினும் அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த பின்னர் நியமனம் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பணிப்புரை அனுப்பி வைத்துள்ளதால், தேர்தலின் பின்பே வழங்கப்படும் எனத் தெரிவித்து அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இருப்பினும் குறித்த நியமனத்தின் வகை , இதற்காக நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற காலம் , பெறப்பட்ட அனுமதிகள் என்பன தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது. அவற்றின் அடிப்படையில் குறித்த நியமனத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேர்வானோர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதனை ஆராய்ந்த தேர்தல் ஆணைக் குழு, நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற காலம் , நியமனத்தின் போது தன்மை , கடமைப் பட்டியல்என்பனவற்றைஆவணரீதியில்உறுதி செய்யுமாறு மாவட்டச் செயலர்களை கோரியிருந்த நிலையில், தற்போது மாவட்டச் செயலர்கள் மேற்படி விபரங்களை ஆணைக்கு முவுக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

## உதவுத்தொகை வழங்கல்

நெடுந்தீவு,ஒக்.21


கடந்த மாதம் நடைபெற்ற ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவிக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாசா வித்தி யாலயத்தைச் சேர்ந்த 156 புள்ளி களைப் பெற்ற சயந்தன் ரட்சகா என்ற மாணவிக்கே அண்மையில் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது.

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த மறைந்த நாகலிங்கம் ஆறுமுகம் நினைவு நிதியாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேசத்தில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஒரே ஒரு மாணவி என்ற பெருமை இவரையே சாரும். (ஐ-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கமலாசனி வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு

கொடிகாமம்,ஒக்.21
விடத்தற்பளை, கமலாசனி வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வும், திறன் வகுப்பறை திறப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.
திறன் வகுப்பறை விருந்தினர்களால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.
அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண திறைசேரியின் முதன்மைக் கணக்காளர் வே.கலைச்செல்வன், தென்மராட்சிக் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர் லலிதா, தென்மராட்சிக் கல்வி வலய சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் சி.நாகராசா, வலிகாமம் வலயக்கல்வி கணக்காளர் சுதர்சினி கலைச்செல்வன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-159)



# வேலியே பயிரை மேய்கிறது

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.21
மன்னாரில் கஞ்சா கடத்தலில் பொலிஸ் அலுவலர் ஈடுபட்டமை கடற்படையினரின் நடவடிக்கைமூலம் நிரூபனம் செய்யப்பட்டுள்ளது. இது வேலியே பயிரை மேயும் செயற்பாடு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வடக்கில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 400 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதுடன், ஐவர் கைது செய்யப்பட்டனர். இதில் யாழ்ப்பாணத்தில் 220 கிலோ கஞ்சாவும், மன்னாரில் 180 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. மன்னாரில் கஞ்சாவைக் கடத்திய வாகனத்தில் பொலிஸ் அலுவலர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.
"போருக்குப் பின்னரே வடக்கில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் பாவனை அதிகரித்தது. அந்த அதிகரிப்புக்கு ஆயுதப் படையினரே காரணம் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாகவே பலமுறை குற்றம் சாட்டிய போதும், அதனைத் தொடர்ந்தும் மறுத்தே வந்தனர். இந்த நிலையில் இலுப்பைக் கடவையில் கஞ்சா கடத்துவமான தகவல் கடற்படையினருக்கு வழங்கப்பட்ட நிலையில் கடற்படையினர் கஞ்சாவைக் கடததியவர்களை விரட்டிப் பிடித்துள்ளனர். இவ்வாறு பிடிக்கப்பட்ட வாகனத்தில் இருந்த இருவரில் ஒருவர் பொலிஸ் அலுவலர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தைக் காக்க வேண்டிய பொலிஸாரே சட்ட விரோத செயலில் ஈடுபட்டால் மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படும். இதன் காரணமாகவே ஏனையோரும் சட்டத்தை மீறு கின்றனர். எனவே மக்களுக்குச் சட்டத்தைக் கூற முன்பு தமது பொலிஸாரை நல்வழிப் படுத்த பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (க-105)

## மதுபோதையில் சாரத்தியம் சாரதிக்கு ரூ.25 ஆயிரம் தண்டம்

கொடிகாமம் ஒக்.21
மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஒரு மாதத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரம் தடை செய்யப்பட்டது.
உந்துருளி செலுத்திய நபருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு கடந்த வாரம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு சாரதி அனு திப்பத்திரமும் தடை செய்யப்பட்டது.
இதேவேளை, உந்துருளியில் மேலதிக நபர்களை ஏற்றிச் சென்ற நபருக்கு 2 ஆயிரத்து500 ரூபாவும், வருமான வரிப்பத்திரம் இல்லாமல் உந்துருளி செலுத்திய இருவருக்கு தலா 2 ஆயிரத்து ஐநூறு ரூபாவும், பிறேக் லைற் இல்லாமல் ஆட்டோ ஓட்டிய நபருக்கு 2 ஆயிரத்து ஐநூறு ரூபாவும், வெள்ளைக் கோட்டை தாண்டி மகிழுந்து ஓட்டிய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், வருமான வரிப்பத்திரம்இல்லாது உந்துருளி செலுத்திய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமும் விதிக் கப்பட்டது. (ஜ-159)

## யாழ்.முன்னாள் ஆயரின் அறக்கொடைப் பேருரை

கொழும்புத்துறை,ஒக்.21
யாழ்ப்பாண மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மறைந்த முன்னாள் யாழ். ஆயர் வ.தியோ கும்பிள்ளை ஆண்டகையின் அறக்கொடைப் பேருரை கடந்த வாரம் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.
யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி ஏ.எப் பெற் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணம் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். நல்லாயனாய் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் சமய, சமூக, அரசியல் பணிகள் ஊடாக வெளிப்படும் தலைமைத்துவம் என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்பணி யோண் பெப்ரிஸ் அன்ரனி அடிகள் பேருரையை நிகழ்த்தினார். இப்பேருரை நூலாக வெளியிடப்பட்டது.
1973ஆம் ஆண்டு முதல் மூன்று தசாப்தகாலமான பணியின் போது ஈழத்தமிழர் வரலாற்றில் பல குழப்பங்களும், சிக்கல்களும், போராட்டங்களும், இடம்பெயர்வுகளும், புலம்பெயர்வுகளும், குருதிக் களரிகளும் ஏற்பட்டவேளை அமைதிக்காகவும் உரிமைக்காகவும் ஆயர் வழங்கிய வகிபாகம் தொடர்பாக உரையில் பெரிதும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்வில் குருக்கள், துறவிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-135)

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த

# பல்கலை மாணவர்களின் 3ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.21
யாழ்ப்பாணம் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பல்கலைகழக மாணவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றன.
மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களின் உருவ படங்களுக்கு மலர் மாலை அணிவித்து, மலர்தூபி, சுடரேற்றி ஏற்றி, அஞ்சலி செலுத்தப்பட்டன.
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் விஜயகுமார் சுலக்சன் மற்றும் நடராஜா கஜன் ஆகியோர் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அன்றைய தினம் அங்கு கடமையில் இருந்த ஐந்து பொலிஸாரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து மூவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு அரசதரப்பு சாட்சிகளாக மாற்றப்பட்டனர்.
கடமைக்குப் பொறுப்பான முதலாவது சந்தேக நபரும், துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட மூன்றாவது சந்தேக நபருக்கும் எதிராக இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 296ஆம் பிரிவின் கீழான கொலைக் குற்றச்சாட்டின் கீழ் பிராது பத்திரத்தைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். "சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட கொலைக் குற்றச்சாட்டுப் பத்திரத்தின் மீது முன்வைக்கப்பட்ட சான்று ஆதாரங்களில் மன்று திருப்தியடைகின்றது. அதனால் அவர்கள் இருவருக்கும் எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்ய மன்று கட்டளையிடுகிறது. அதற்காகச் சுருக்கமுறையற்ற விசாரணைகளின் வழக்கு ஆவணங்களை சட்ட மா அதிபருக்கு பாரப்படுத்த மன்று பணிக்கின்றது. அத்துடன், சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றால் வழங்கப்பட்ட பிணையில் விடுவிக்கப்படுகின்றனர்" என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் கடந்த ஜூன் 27ஆம் திகதி கட்டளை வழங்கியிருந்தார். (க-37)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.21
சிறகுகள் அமையத்தின் யாழ்ப்பாணம் பயில்களத்தின் ஏற்பாட்டில் "சமூக நிறுவனங்களும் ஆவணப்படுத்தலும்" என்ற தலைப்பிலான கருத்தமர்வு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் ( யாழ் மத்திய கல்லூரிக்கு அருகில்) இடம்பெறும்.
ஆவணப்பட்டுத்தல் முறைமைகள் மற்றும் ஆவணப் படுத்தலில் ஆர்வமுடையோர் நிகழ்வில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கட்சி தப்ப வேண்டுமெனில் சஜித் வெற்றி பெறவேண்டும்

## ஹெக்டர் அப்புகாமி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை, நகர சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டமாயின் சஜித் பிரேமதாச வெல்ல வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கியதேசியக்கட்சிதலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மிகச்சிறந்தகொள்கையுடைய பாரம்பரியக் கட்சியாகவிளங்கியசுதந்திரக் கட்சி தற்போது அழிவடைந்த நிலையில் உள்ளது.

அது முற்றாக அழிந்து போவதைத் தடுப்பதற்கு அன்னம் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும்.

அரச தலைவர் தேர்தல் நெருங்கும் நிலையில் பல்வேறுபொய்யானதகவல்கள் பரப்பப்படும். அதேவேளை நாட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிப்பார்கள். அண்மையில் பலாலியில் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்தி நிலையத்தின் பெயர்ப் பலகையில் விமான நிலையத்தின் பெயர் முதலாவதாக தமிழ்மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றுகூறி விமல் வீரவன்சசர்ச்சையைஏற்படுத்தி வருகின்றார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அலுவலகத்தின் பெயர்ப்பலகையிலும் முதலில் தமிழ்மொழியிலேயே பெயரிடப்பட்டிருக்கிறது. இவர்கள் வடக்கில் ஒருகதையையும், தெற்கில் வேறொரு கதையையும்கூறிநாட்டு மக்கள்மத்தியில்இனவாதத்தைத் தூண்டி பிரிவினையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள். இவ்வாறு செயற்படுபவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இந்தநாட்டின் முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோரின்வாக்குகள்சஜித்பிரேமதாசவுக்கு வழங்கப்படும்என்பதால்அதனைத் தடுக்கும் நோக்கிலேயே எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா கோத்த பாய ராஜபக்சவால் திட்டமிடப்பட்டு வேட்பாளராகக்களமிறக்கப்பட்டிருக்கிறார்.

நாட்டின் பல பாகங்களிலும் நுண்கடன் வழங்கலால்பாதிக்கப்பட்டபெண்கள்பெரும்எண்ணிக்கையில் உள்ளனர்.

அது மாத்திரமன்றி கடுமையான வாழ்வாத சிக்கல்களை எதிர்நோக்கும் பெண்களும் உள்ளனர்.

அவர்களுக்கானசிறப்புத் திட்டமொன்றும் விரைவில் வெளியிடப்படும். இன்றையஇளைஞர்சமுதாயத்தில் நடைமுறை அரசியல் செயற்பாடுகளினாலும், நிர்வாகக் கட்டமைப்புக் குறைபாடுகளி னாலும் அதிருப்தியடைந்துள்ள இளைஞர் குழாமொன்று உள்ளது.

எனவே அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதுடன், நாட்டின் அனைத்து இளைஞர் யுவதிகளையும் உள்ளிடக்கிய கொள்கைத்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்-என்றார்.(எ-61)

# ஹிஸ்புல்லாவின் முடிவு தற்கொலைக்குச் சமன்

## பைசல் காசிம் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.21

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில்ஹிஸ்புல்லாகளமிறங்கி இருப்பது தற்கொலைக்குச் சமமானது என்று சுகாதார சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

கல்முனையில்நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ்.எம் ஹிஸ்புல்லா அரசதலைவர்வேட்பாளராகக்களமிறங்கி இருப்பது அவருடைய பல்கலைக்கழகத்துக்கு இருக்கின்ற பிரச்சினைகளை ஒரு காலகட்டத்தில் தீர்த்துக் கொள்ள முடியுமென்ற யோசனையாக கூட இருக்கலாம்.

இது ஒருதற்கொலை வேலைத்திட்டம் என்றுதான் நான் கருதுகிறேன். கோத்தபாயராஜபக்சவின்தரகராகதான் ஹிஸ்புல்லா வேலை செய்கிறார். முஸ்லிம்கள் மட்டுமல்லசிறுபான்மைமக்களின்நலன்சார்ந்தபலகோரிக்கைகளை கடந்த கால ஆட்சியாளர்களுடன் செய்திருக்கின்றோம். ஆனால் அவற்றில் பலவற்றில் வெற்றி கொண்டிருக்கின்றோம், சிலநடைபெறாமல்போயிருக்கின்றன.

அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் மேற்கொண்ட சந்திப்பின் ஊடாக அவர் கூறும் வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்பட்டு இருக்கின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் செயற்படுகின்றோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம், சாய்ந்தமருதுப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினை போன்ற விடயங்களை இழுத்தடிப்பு செய்யாமல் குறிப்பிட்ட சில காலங்களுக்கு முடித்து தருவேன் என்று சஜித் உத்தரவாதம் வழங்கியிருக்கிறார்.

அரச தலைவர் தேர்தல் சிறுபான்மை மக்களுக்கு அவசியமற்றது. நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி ஆட்சிக்கு வருமானால் நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை தொடர முடியும். அதற்காகவே நாங்கள் அரச தலைவர் தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டி இருக்கின்றது- என்றார். (எ)

# கோத்தபாய அரசியல்வாதி இல்லையாம்



கொழும்பு, ஒக்.21

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச இந்த முறை தேர்தலில்ஒருகட்சியின்அரசியல்வாதியாகப்போட்டியிடவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக ஒரு அரச ஊழியர் தேசிய இயக்கங்களின் கோரிக்கைக்கு அமைய அரச தலைவர்வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

சுமார் 70 வருடங்களுக்கு பின்னர் நாட்டின் அரசியல் நிலைமை தொடர்பாக நாட்டு மக்களுக்குபெரும்அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது. அதேபோன்றுஅரசியல்வாதிகள்தொடர்பாகவும் அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் ஏற்படவில்லை.

நாட்டுக்குச் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தக் கூடிய ஒருவரை அனைத்து இடங்களிலும் தேடி வருகிறார்கள்.

அந்த வெற்றிடத்தைத் இன்று உங்களுக்கு நிரப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியுடன்சென்றுஉடன்படிக்கைகளை எட்ட வேண்டியதேவையிருக்கவில்லை.

தற்போது அதற்கான அவசியமோ, எதிர்காலத்தில்மேற்கொள்ளவேண்டிய தேவையோ எமக்கில்லை- என்றார். (எ)

# முடிவை இப்போது அறிவிப்பது தமிழர்களுக்குப் பாதகமாகலாம்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் மக்களின் முடிவை முன்னதாக அறிவித்தால் நாங்கள்எதிர்பார்க்காதஅரசதலைவர்வேட்பாளர்அதிக வாக்குகளைப் பெற்றுவிடுவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் மேற்கில் நடைபெற்ற மீனவர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நடக்கவுள்ளஅரசதலைவர்தேர்தலில்தென்னிலங்கையில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் அரச தலைவர் வேட்பாளராக வருவோர் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவுகளைக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டி வாக்குக்களைப் பெறும் யுக்தியைப் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்மக்களின்முடிவைமுன்னதாகஅறிவிக்கும்போது, நாம் எதிர்பார்க்காத வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அரச தலைவர் தேர்தலில் தமிழ் க்கள் ஒரு தீர்மானிக்கும் சந்தியாகக் திகழ்கின்றனர். இந்தமுறையும் தமிழ் மக்கள் தீர்மானிக்கும்சக்தியாக இருப்பதால் முன்னதாக முடிவுகளை அறிவிப்பது சரியாக இருக்காது- என்றார். (எ-ரி3)

# அறிவுறுத்தல்கள் தொடர்பாக எவரும் கேள்வி கேட்க முடியா!

## தேர்தல்கள் ஆணையாளர் கண்டிப்பு

கொழும்பு, ஒக்.21

தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் நான் விடுக்கும் அறிவுறுத்தல்கள் தொடர்பாக எவரும்என்னைக்கேள்விக்குட்படுத்தமுடியாது. தேர்தல் சட்டவிதிமுறைகளைச் மீறிச் செயற்படும் வேட்பாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள்எடுக்கப்படும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்மகிந்ததேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரைப்புரையின்போதுபோர்வெற்றியைக் குறிப்பிடுவது தடை செய்யப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருந்தார். அவ்வாறு எந்தச் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதுஎன்பதைவிளக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார். அது தொடர்பாகக்கருத்துத்தெரிவித்தபோதே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் சட்ட விதிகள் தொடர்பாக எம்மிடம் கேள்விகேட்கவேண்டிய அவசியம் இல்லை. அவற்றுக்குப் பதிலளிக்கப் போவதில்லை. விதிகளை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைஎடுக்கத்தயங்கப் போவதில்லை. வேட்பாளர்கள் வேண்டுமானால் எனது அறிவுறுத்தல்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாட முடியும்.

போர் வெற்றி என்பது ஒருமனிதனோஅல்லது ஓர் அரசியல் கட்சியோ சம்பந்தப்பட்டதல்ல. முழு நாட்டு மக்களும் சம்பந்தப்பட்டது.

அதைத் தேர்தல் பரப்புரைக்காகப்பயன்படுத்த முடியாது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்ப் பலகையை வைத்து இனவாதம் கிளப்புகின்றனர்

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.21

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளத்தை வைத்துச் சிலர் இனவாதம் பேசுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களின் கட்சி அலுவலகத்திலும் அவர்கள் அவ்வாறுதான் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரசியல் மேடைகளில் யாழ்ப்பாணம் வானூர்தி நிலையத்தின் பெயர்ப்பலகை தொடர்பாகப் பேசப்படுவதைக் கண்டேன். சில மாகாணங்களில் சிங்கள மொழி இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றும், தமிழ் மொழி முதலில் உள்ளது என்றும் பெரும் சேறுபூசும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது கட்சி அலுவலகத்தில் அவர்களும் அவ்வாறுதான் பயன்படுத்தியுள்ளனர். இதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இந்த விடயம் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அரசியலரங்கில் சர்ச்சைக்கு வித்திடுகின்ற பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள கோத்தபாய ராஜபக்சவின் அலுவலகத்தில் உள்ள பெயர்ப் பலகையிலும் மொழிகள் அந்த வரிசையில் தான் இருக்கின்றன.

அது யாழ்ப்பாணத்தின் வாக்குகளைப் பெறுவதற்கு, இது சிங்கள வாக்குகளைப் பெறுதற்கு.

இத்தகைய அரசியல்வாதிகளை வெறுத்து நிராகரிக்க வேண்டும்- என்றார். (ஏ)

# சஜித் வெற்றி பெறுவதை எவரும் தடுக்க முடியாது

## சுவாமிநாதன் தெரிவிப்பு



வவுனியா, ஒக்.21

அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச அரச தலைவராக வருவதைத்தடுத்து நிறுத்த எவராலும் முடியாது என்று முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அலுவலகத்திறப்பு விழாவில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் வாழும் மூவின மக்களின் முன்னேற்றத்துக்கும் சஜித் பிரேமதாச தனது முழுமையானஒத்துழைப்பை வழங்குவார்.

இன்று அனைத்து சமூகமும் சுதந்திரமாக நடமாடும் சூழலை உருவாக்கிய பெருமை ஐக்கிய தேசிய கட்சியையே சாரும். கோத்தபாயவுக்கு உங்கள் வாக்குகளை வழங்கினால் அந்த நிலமை மாறிவிடும்.

முன்பு நடந்த பிரச்சினைகள் உங்களுக்கு தெரியும். வெள்ளை வான், கறுப்பு வான் என்று மக்களை அச்சப்படுத்தியிருந்தார்கள். சஜித்துக்கு வாக்கை செலுத்தினால் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், சுபீட்சமான வாழ்வுக்கும் தனது தந்தையைப்போல எளிமையான, சிறப்பான பணியை அவர் மக்களுக்கு ஆற்றுவார்.

அவர் இளமையாக இருப்பதால் அவரும், அவரோடு இருப்பவர்களும் வேகமாகப் பணிகளைச் செய்யமுடியும். அவரை நாட்டின் தலைவராக மாற்றவேண்டும் என்பதுஎனதுகோரிக்கை. ஐக்கியதேசிய கட்சியில் பல சீர் சிருத்தங்களைச் செய்திருக்கிறோம். மக்களுக்காக சேவை செய்வதே எமது முதன்மை குறிக்கோள்.

எதிர்வரும் ஐந்து வருடங்களில் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் பல்வேறு வேலைத் திட்டங்களை செய்வதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

எமது ஆட்சியில் இதுவரை 20 ஆயிரத்து 718 வீடுகளை நாம் அமைத்திருக்கின்றோம். வாழ்வாதார உதவிகள், சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள், குடிநீர் வசதிகள் எனப் பல முன்னேற்ற திட்டங்களை ஐக்கிய தேசியகட்சி மக்களுக்கு செய்து வந்திருக்கிறது.

அதை மனதிலே வைத்துக்கொண்டு தமிழர்களின் உறுதிக்காகவும், தமிழ் சமூகத்தின் எதிர்காலத்துக்காகவும் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு உங்கள் வாக்கை வழங்க வேண்டும். அது உண்மையில் நடக்கும்.

எதிர்வரும் 16ஆம் திகதி அவர் அரச தலைவராக வருவார் என்பதையும் இந்த மேடையிலே நான் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்- என்றார். (ஏ-110)

# சு.கட்சியிடம் 15 இலட்சம் வாக்குகளாம்

கொழும்பு, ஒக்.21

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 15 இலட்சம் வாக்குகளுடன் ஆதரவளித்துள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார். நேற்றுமுன்தினம் கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அந்த நிகழ்வில்அவர் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணிக்கு எவ்வளவு வாக்குகள் கிடைத்தன . அந்த வாக்குகள் மீண்டும் கோத்தபாய ராஜபக்சவுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். வெறும் 4 அல்லது 5 லட்சம் வாக்குகளை மாத்திரம் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவுக்குப் பெற்றுக் கொடுப்பது எமது நோக்கம் அல்ல. இரண்டு கட்சிகளினதும் வாக்குகளை ஒன்று சேர்க்குமிடத்து அதிகூடிய வாக்குபலத்தை பெற்றுக்கொள்ள முடியும்- என்றார் . (ஏ)

# கோத்தாவின் நடவடிக்கைகளால் சஜித்தின் வெற்றி உறுதியாகிறது

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயராஜபக்சதரப்பினரின் அண்மைய நடவடிக்கையால் சஜித் பிரேமதாசவின்வெற்றிஉறுதியாகியுள்ளது என்று இராஜாங்கஅமைச்சர்ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்குஅனைத்துத்தரப்பிலிருந்தும்ஆதரவு வருகின்றன. அதனால் சஜித்தின் வெற்றி உறுதியாகியுள்ளது. எதிர்த் தரப்பு வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு தற்போது மக்களின் கேள்விக்குப்பதில்வழங்க முடியாதுள்ளது. ஊடகவியலாளர்சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதில் வழங்காது சிரித்துச் சமாளிப்பதை நாம் அவதானித்தோம்.

இது போன்ற இன்னும் இரு ஊடகவியலாளர்சந்திப்புக்களை நடத்தினால் அவரது உண்மை முகம் முழுமையாக வெளிவரும். சஜித் பிரேதமாச முன்னாள்அரசதலைவர் ஒருவரின் மகன். அவரிடம்உள்ளஎளிமைமகிந்த ராஜபக்சவிடமோ அவரது புதல்வர்களிடமோ உள்ளதா? இல்லை.

கோத்தபாயராஜபக்சஇராணுவத்தைப் பாதுகாப்பேன்என்றுகூறுகின்றார். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை இவர்கள்தான் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைத்தார்கள் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

இவர்களால்நாட்டில்மேற்கொள்ளப்பட்டகொலைகளையும் நாம் மறக்கவில்லை. வசீம் தாஜுதீன் நாமல் ராஜபக்சவின் நண்பர் என்றால் ஏன் அப்போதே விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. இந்த விசாரணையைக் கூட நாம் எமது காலத்தில்தான் மேற்கொண்டோம்.

கோத்தபாயராஜபக்சதரப்பினர்கடந்தகாலங்களில் மேற்கொண்ட எந்தச் செயற்பாடுகளையும் நாம்மறக்கவில்லை. நாட்டின் மக்கள் அடுத்த அரச தலைவராக சஜித் பிரேமதாசவை ஆட்சியில் அமர்த்தத் தீர்மானித்து விட்டனர்- என்றார். (ஏ)

# மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரியால் விடுவிக்கத்தாமதம்

## அரச தலைவர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.21

மாகாணங்களுக்கு 2019 ஆம் ஆண்டில்ஒதுக்கப்பட்டநிதிஒதுக்கீடுகள் இதுவரைதிறைசேரியில் இருந்து விடுவிக்கப்படாமை தொடர்பாகஅரசதலைவர்மைத்திரிபால தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின்9மாகாணஆளுநர்கள், முதன்மைச்செயலாளர்கள்மற்றும்திறைசேரிப்பணிப்பாளர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மாகாணங்களுக்குஒதுக்கப்பட்ட நிதிஅதில்இருந்துஇதுவரைவிடுவிக்கப்பட்ட நிதி என்பவற்றுடன் மேலும்விடுவிக்கப்படவேண்டிய நிதி தொடர்பிலும் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. அதேநேரம் இவ்வாறு விடுவிக்கப்பட வேண்டிய நிதியில் பணி முடிந்து சிட்டைகள் தயாராகவுள்ள தொகை, பணிகள் ஆரம்பித்த விவரம் என்பன தனித்தனியே ஆராயப்பட்டன.

இதன் பிரகாரம் 2019ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் தற்போது மாகாணங்களுக்கு 45 வீதமான நிதியே விடுவிக்கப் பட்டுள்ளது. எஞ்சியதொகை விடுவிக்கப்படாதமையே நெருக்கடி நிலமைக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப் பட்டது. இதனையடுத்து மாகாணங்களுக்கு ஒதுக்கீட்டு நிதியின் 70 வீதமான நிதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவர் திறைசேரிப்பணிப்பாளருக்குப் பணித்துள்ளார் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வெற்றியினூடாக அபிவிருத்திகள் நடக்கும்

*சஜித் பிரேமதாச தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.21

அரச தலைவர் தேர்தல் வெற்றியின் ஊடாக நாட்டில் பெரும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நாட்டின்பலபாகங்களிலும்தூர்ந்து போயுள்ளகிணறுகளைமீட்பதுடன், தரிசுநிலங்களைமீட்டுச்செழிப்பான வயல்வெளிகளை அமைப்பதுடன், அவற்றுக்கு இடைநில்லாபட நீர்பாசனத்தைவழங்கக்கூடியவாவிகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக 'வெவ் உதாவ' என்ற பெயரில் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் திட்ட மிட்டுள்ளோம். நாட்டில் உள்ள வாவிகளை 2 வருடங்களுக்குள் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிநாட்டில் பணிபுரியும் பெண்களுக்கு இன்னல்கள் அற்றபாதுகாப்பான தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்காக அந்தந்தநாடுகளின் அரச தலைவர்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படும்.

இலங்கைப் பணிப்பெண்களை பாதுகாப்பதற்குச்சிறப்புத்வேலைத் திட்டங்களை முன்னெ டுக்கவுள்ளோம். கூறுவோர் என்ன கூறினாலும் அதனை கேட்போர் அவதானமாக கேட்க வேண்டும் -என்றார். (எ)

## வாக்குறுதிகளை நம்பாமல் சிந்திக்கவேண்டும் மக்கள்

*முன்னிலை சோசலிச கட்சியின் வேட்பாளர் துமிந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.21

தேர்தலை முன்னிட்டு வாக்குறுதிகளை அள்ளிவீசும் வேட்பாளர்கள் நவம்பர் 16 ஆம் திகதிக்கு பின்னர் தங்கள் முன்னைய மாளிகைக்குள் சென்றுவிடுவார்கள். ஆனால் வாக்களித்த மக்களோ கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

கடவத்தையில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பரப்புரைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் நலன் தொடர்பில் இது வரையில் சிந்திக்காதவர்கள் தற்போது மக்களை நாடியுள்ளனர். மக்கள் இது தொடர்பில் விழிப்புடன் செயற்படவேண்டும். இது தொடர்பில் தெளிவு படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது. அதனையே மேற்கொண்டு வருகின்றோம். உழைக்கும் வர்க்கத்தினருக்கும் அரசியலில் பங்கு பற்றுவதற்கு ஏற்ற தான உறுதியான நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும்.

தேர்தல் பரைப்புரைகளை முன்னெடுத்து வரும் பிரதான கட்சிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பனரும் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அள்ளி வீசுகின்றனர். இருப்பினும் தேர்தலுக்கு பின்னர் இவை அனைத்தும் நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குறியே. கடந்த 70 வருட காலத்தில் நாட்டின் வறுமையை ஒழிக்க முடியாமல் போன அரசுகளால் இனிமேலும் வறுமையை ஒழிக்க முடியுமா?

சனத்தொகையில் 43 வீதமானோர் அதிகபடியாக நாளொன்றிற்கு 300 ருபா வருமானத்தைப் பெறுபவர்களாக உள்ளனர். இவ்வாறு வறுமையில் வாடும் மக்கள் தேர்தலுக்குப் பின்னரும் கைவிடப்பட்டவர்கள் ஆவார்கள். மாறாக வாக்குறுதிகளை அள்ளி இறைத்தவர்கள் தமது முன்னைய நிலைக்குத் திரும்பி விடுவார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் தேர்தலுக்கு பின்னரான நிலைமை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினர் பாதுகாக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றத்தில் உள்ள சிலர் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளை ஒடுக்கும் வகையிலான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு முற்படுகின்றனர். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் மக்களின் உரிமைகளை ஒடுக்கும் வகையினான சட்டத்தைக் கொண்டு வரமுற்படுகின்றனர். அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. நாட்டின் சுகாதாரம் , கல்வி மற்றும் ஏனைய துறைகளின் வளச்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமானதாகும். பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதனையும் ஏற்றுக் கொள்ள முடியாது. - என்றார். (எ-61)

## இனவேறுபாடுகளைக் காட்டாது உழைத்த கட்சிதான் ஐ.தே.க!

*சுவாமிநாதன் எம்.பி சொல்கிறார்*

கொழும்பு, ஒக். 21

கட்சி வேறுபாடுகள் இருந்தும் இந்த அரச தலைவர் தேர்தலிலே நாங்கள் எல்லோரும் சேர்ந்து அன்னம் சின்னத்திற்கு வாக்களித்து சஜித் பிரேமதாசவை இந்த நாட்டின் தலைவராக நியமிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் அப்துல் சமீயூ முஹம்மது பஸ்மி தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் சஜித் பிரேமதாசவை ஆதரித்து முதலாவது பரப்புரைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் இன, மத பேதமின்றி எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சஜித்துக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு பார்க்காமல் உழைத்த கட்சி. எனவேதான் இன, மத, கட்சி ரீதியிலான வேறுபாடுகள் பார்க்காது ஐ.தே.கவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றேன் - என்றார். (ம-56)

## 5 ஆண்டுகளில் செய்யாதோர் பொய் கூறி ஏமாற்றுகின்றனர்

*அங்கஜன் எம்.பி. கூறுகின்றார்*

கொழும்பு, ஒக்.21

ஆட்சி அங்கீகாரம் கிடைத்த ஐந்து ஆண்டுகளில் எதனையும் செய்யாதவர்கள் மேலும் ஐந்து ஆண்டுகள் ஆட்சியை கேட்பதில் எந்த அர்த்தமும் இல்லை. நல்லாட்சியில் தீர்வுகள் பெற்றுத் தரப்படும் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டனர்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் இடையில் இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டுள்ளது. நாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் முன்வைத்த கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு கோத்தபாய ராஜபக்சவால் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மக்களுக்கான கோரிக்கை வரைபு ஒன்றை நாம் முன்வைத்தோம். அதில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் விடுதலை, எமது மக்களின் கல்வி, சுகாதார மேம்பாடுகள் என அத்தியாவசியமான பிரச்சினைகளை நாம் முன்வைத்தோம்.

அவற்றை ஏற்றுக்கொண்ட அவர் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி அவசியம் என்றதை ஏற்றுக்கொண்டதுடன் அவற்றை செய்து முடிப்பேன் என்றும் வாக்குறுதி கொடுத்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பும் பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது பல்கலைக்கழக மாணவர்களை வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் தமிழ் மக்கள் இன்று தெளிவான சிந்தனையில் கோத்தபாய ராஜபக்சவுக்கு பூரண ஆதரவை வழங்குவார்கள்- என்றார். (எ-31)

# எவரும் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வுகளை வழங்கமாட்டார்கள்

*சாள்ஸ் எம்.பி தெரிவிப்பு*

வவுனியா, ஒக். 21

எவர் அரச தலைவரானாலும் எங்களுடைய மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வுகளை வழங்க மாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா முருகனூரில் நேற்றயதினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் நிலைப்பாட்டுக்கு அப்பால் என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடாக இதனை நான் கூறிக் கொள்கின்றேன். இருந்தாலும் வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்கள், வடக்கு கிழக்குக்கு வெளியே இருக்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து ஒரு செயற்பாட்டினை முன்னெ டுக்கவேண்டிய தேவை இருக்கின்றது. எந்த அரச தலைவர் வந்தாலும் எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்காது. ஆனால் தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

தமிழ் தேசியக் கூ[illegible] வரை முடிவுகள் எ[illegible] மக்கள் ய[illegible]ள்ள கருத்துக்களையும் வைத்தே ஓர் இறுதியான முடிவு எடுக்கப்படும். நாங்கள் அவசரப்பட வேண்டிய தேவையில்லை. நாங்கள் எவ்விதமான சலுகைகளையும் பெற்று அரசியல் செய்யவில்லை.

அவ்வாறு செய்வோமாக இருந்தால் இவ்வளவு பொறுமை எமக்குத் தேவையில்லை. இப்போதே நாங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் எவர் என கூறிவிட்டு அதற்குரிய வகையில் செயற்பட்டிருக்கலாம். நாங்கள் [illegible] மக்கள் [illegible]க்கை உள்ளது- என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகாரக் கும்பலுக்கு வக்காளத்து வாங்கும் ஈனப்பிறவிதான் விஜயதாச

## போட்டுத் தாக்குகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஒக். 21

விஜயதாச ராஜபக்ச கொலைகார ராஜபக்ச கும்பலுக்கு வக்காளத்து வாங்குவதில் வல்லவர். இவர் ஓர் ஈனப்பிறவி. அதனால்தான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் காலடியில் விழுந்து அவருக்கு ஆதரவு வழங்க இவர் முடிவெடுத்துள்ளார். இவ்வாறு பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதாக விஜயதாச அறிவித்துள்ளமை தொடர்பில் பன்னாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஜயதாச ராஜபக்ச எமது அரசில் நீதி அமைச்சராக, உயர்கல்வி அமைச்சராக இருந்தவர். இவரின் கேவலமான நடவடிக்கைகளால் தான் அமைச்சுப் பதவிகள் பறித்தெடுக்கப்பட்டன. இவரை அமைச்சராக நியமித்ததையிட்டு எமது அரசு வெட்கப்படுகின்றது. இவர் கொலைகார ராஜபக்ச கும்பலுக்கு வக்காளத்து வாங்குவதில் வல்லவர். இவர் ஓர் ஈனப்பிறவி. அதனால்தான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் காலடியில் விழுந்து அவருக்கு ஆதரவு வழங்க இவர் முடிவெடுத்துள்ளார். கோத்தபாயவுக்கு இவர் ஆதரவு வழங்குவது புதிய விடயம் அல்ல. ஏனெனில், விஜயதாசவின் இறுதி அடைக்கலம் ராஜபக்ச வீடுதான் என்று எமக்கு ஏற்கனவே தெரியும். இவரின் அரசியல் அரச தலைவர் தேர்தலுடன் முடிவுக்கு வந்துவிடும். இப்படிப்பட்ட ஈனப்பிறவிகளை தம் வசம் வைத்துக்கொண்டு அரச தலைவர் தேர்தலில் வெற்றியடையலாம் என்று கொலைகார ராஜபக்ச கும்பல் கனவு கண்டால் அது அந்தக் கும்பலின் பகல் கனவாகவே இருக்கும் - என்றார்.

(ஒ.5,22)

# கோத்தபாயவை மட்டும் குற்றம் சாட்ட முடியாது

## வரதராஜப் பெருமாள் வக்காளத்து

கொழும்பு, ஒக்.21



போரில் முதன்மைக் குற்றவாளிகளை விடுத்துக் கோத்தபாய ராஜபக்சவை மட்டும் குற்றம் சுமத்துவது நியாயமற்றது. ரணில், சஜித், சரத் பொன்சேகா மூவரும் போர்க் குற்றவாளிகளே என்று தெரிவித்துள்ளார் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய அரசியல் சூழலில் கூட்டாட்சிக்கு (சமஷ்டி) எந்த வாய்ப்பும் இல்லை. தமிழர்கள் யதார்த்தமான சூழ்நிலையை அறிந்து கொள்ள வேண்டும்.

அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய தேவை உள்ளது. போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்டது. தமிழ் மக்களின் நிலைமைகள் இன்னமும் பின்தங்கியதாகவே உள்ளது. தமிழ் மக்கள் முன்னேற்றம் காண வேண்டுமாயின் இந்தமுறை அரச தலைவர் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தமிழர்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பவற்றில் முன்னேற்றம் காணவேண்டும். கடந்த கால நிலைமைகளை இன்னமும் சிந்தித்துக் கொண்டிருப்பது அர்த்தமற்ற ஒன்றாகும். அதனால் தமிழ் மக்கள் ஏமாற்றமடையும் நிலைமையே உருவாகும். கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் இருந்ததை விடவும் மோசமான நிலைமையிலேயே இன்றும் வாழ்கின்றனர்.

போர் ஒன்று இடம்பெற்றது. இதில் வெறுமனே கோத்தபாய ராஜபக்சவின் மீது குற்றம் சுமத்த முடியாது. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா ஆகிய அனைவரும் குற்றவாளிகள். அவர்கள் அனைவரையும் விடுத்து கோத்தபாய ராஜபக்சவின் மீது மட்டுமே குற்றம் சுமத்துவது நியாயமற்றது. இந்தமுறை தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷவை ஆதரித்து தமிழ் மக்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

(எ-31)

# மோசடியற்ற தேர்தலாக இந்த தேர்தல் அமையும்

## மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

ஜனநாயகம் மிக்க ஊழல், மோசடியற்ற தேர்தலாக இந்த முறை அரச தலைவர் தேர்தல் அமைவதற்கு உத்தரவாதமளிக்க முடியும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள நெதர்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது இலங்கைக்கும் நெதர்லாந்துக்குமிடையிலான இருதரப்பு மற்றும் பிராந்திய செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் சுதந்திரம், ஜனநாயகம் மிக்க தேர்தல் முறைமையை தொடர்ச்சியாக பேணி வருவது தொடர்பில் ஜனநாயக நாடுகள் இலங்கையை பாராட்டியுள்ளன என்று நெதர்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஸ்டெவ் புளொக் தெரிவித்துள்ளார்.

இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலின்போது கட்சி சார்பின்றி தான் செயற்படப்போகின்றேன் என்று தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இந்த தேர்தல் அமைதியான ஜனநாயகமிக்க, ஊழல், மோசடியற்ற தேர்தலாக அமைவதற்கு தன்னால் உத்தரவாதமளிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் முப்படைகள் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் தேர்தல் காலங்களில் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து பக்கச்சார்பற்ற சுயாதீனமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுத்த வேண்டு என்று பொலிஸ் துறையினருக்கும் முப்படையினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளின்போது முக்கியமாக நெடுஞ்சலைகள் அபிவிருத்தி, நீர் மாசடைதலை தடுப்பதற்கான செயற்திட்டங்கள், கிராமிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பாலங்களை அமைக்கும் வேலைத்திட்டங்களுக்காக நெதர்லாந்து அரசு இலங்கைக்கு வழங்கிவரும் தொடர்ச்சியான ஒத்துழைப்பை பாராட்டிய அரச தலைவர், அண்மையில் பொலன்நறுவையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில வேலைத்திட்டங்களுக்கு நெதர்லாந்து அரசால் வழங்கப்பட்ட உதவிகளையும் நினைவுகூர்ந்தார்.

இலங்கையின் திரவப் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அத்துறை தொடர்பில் நிபுணத்துவமுடைய நெதர்லாந்தின் பங்களிப்பை மேன்மேலும் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-31)

## மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள்

மன்னார்,ஒக்.21

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் 89 ஆயிரத்து 403 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அவர்கள் 76 வாக்கெடுப்பு நிலையங்களில் தமது வாக்குகளைப் பதிவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




(க-60)

# மாவீரர் நினைவேந்தலை குழப்ப கோத்தபாயவால் குழு நியமிப்பு

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஒக. 21

மாவீரர் துயிலுமில்லம் நினைவேந்தலைக் குழப்புவதற்கு கோத்தபாயவால் கிளி நொச்சிக்கு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றுகரைச்சிபிரதேசசபை உறுப்பினர்ச.ஜீவறாஜாகுற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வருடம்தோறும்மக்களுடன் இணைந்து பணிக் குழுவுக்கு ஒத்துழைப்புவழங்கி, மாவீரர்களின் பெற்றோர்களை ஒருங்கிணைத்து அமைதியான முறையில் உணர்வு பூர்வமான நினைவேந்தலை செய்து வருவதனை அனைவரும் அறிந்ததே.

ஆனால் இம் முறை நினைவேந்தல் செய்வதற்காக பூர்வாங்கப்பணிகள்பணிக் குழுக்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இனப்படுகொலையாளி கோத்தபாய ராஜபக்சவுக்கு விலை போன சில அடிவருடிகளைக் கொண்டு இதனை குழப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதனை அறிகின்றோம்.

அடிவருடிகளுக்கும் அரசுக்கும் அவர்கள் புலிகள், பங்கரவாதிகள் என பல பெயர்கள் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு அவர்கள் உறவுகள் ,பிள்ளைகள் என்பதனை அனைவரும்புரிந்து கொள்ள வேண்டும்.

அவர்களுக்குவிலைபோன எமது உறவுகளை நினைக்கும்போதுசங்கடமாகஇருந்தாலும், அவர்களின் குழப்பகரமான செயலுக்கு எமது மக்கள் பலிக்கடா ஆகாது இம் முறையும் சுமூகமாக அமைதியான முறையில் வழமை போன்று நினைவேந்த வாருங்கள். குழப்பவாதிகளுக்கு தக்க பாடம் புகட்டுவோம்என்றுள்ளது.

(க-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால ஜப்பான் பயணம்

கொழும்பு, ஒக். 21
அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் நடுநிலை வகிக்கப்போவதாக அறிவித்துள்ள, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஜப்பானுக்கு நேற்றிரவு பயணமாகியுள்ளார்.

அரச தலைவரும், அவரது மனைவி ஜெயந்தி புஷ்பாகுமாரியும், ஜப்பானிய பேரரசர் நருஹிடோவின், சிம்மாசனம் ஏறும் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜப்பானியப் பேரரசராக, நருஹிடோ நாளை பதவியேற்கவுள்ளார். இந்த விழாவில், அரச தலைவருடன், பிரிட்டன் இளவரசர் சாள்ஸ், சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் மொகமட் பின் சல்மான் மற்றும் பல உலகப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரச தலைவருக்கு ஜப்பானிய பேரரசர் நருஹிடோ நாளை செவ்வாய்க்கிழமையும், ஜப்பானிய தலைமை அமைச்சர் சின்சோ அபே நாளை மறுதினம் புதன் கிழமையும் விருந்துபசாரம் அளிக்கவுள்ளனர்.

வியாழக்கிழமையே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொழும்பு திரும்பவுள்ளார்.

2015இல் அரச தலைவராகப் பதவியேற்ற பின்னர், மைத்திரிபால சிறிசேன, ஊடகங்கள் இல்லாமல், அரச தலைவர் செயலக மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மாத்திரம் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இன்னமும் 26 நாள்களில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

# தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை ஆபத்தானது

## பதறுகிறார் மகிந்த

கொழும்பு, ஒக். 21
அரச தலைவர் தேர்தலில் ஆதரவு வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகள் மிகவும் ஆபத்தானவை. இதுதொடர்பில் பேச்சு நடத்துவதை நினைத்துக் கூட பார்க்க முடியாது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனவாத, பிரிவினைவாத நிபந்தனைகளை வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களே நிராகரிப்பார்கள். கூட்டமைப்பின் நிபந்தனைகளை நிராகரிக்கும் நாட்டில், ஒருமைப்பாட்டை ஏற்கும் வடக்கு அரசியல் கட்சிகள் பல கோத்தபாய ராஜபக்சவின் வெற்றிக்கு முன் நிற்பார்கள்.

ஆபத்து மிக்க யோசனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னிடம் இதுவரையில் முன்வைக்கவில்லை. நான் அறிந்த ஊடகங்களில் வெளியாகியிருந்த 13 விடயங்கள் தொடர்பில் மாத்திரமே கருத்து வெளியிடுகின்றேன் என்றார். (ஓ.5)

# காரைநகர் சாலை சாரதி கைது

யாழ்ப்பாணம், ஒக். 21
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர்ச் சாலையைச் சேர்ந்த சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மதுபோதையில் வாகனத்தை வேகமாகச் செலுத்திய குற்றத்துக்காக கைது செய்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். வேகமாக பேருந்தைச் செலுத்திய குற்றத்துக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சாலை முகாமையாளர் குறிப்பிட்டார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 42 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் இரவு பேருந்து பயணித்துள்ளது. காலியவெலப் பிரதேசத்தில் பேருந்தை பொலிஸார் மறித்துள்ளனர். சாரதியையும் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அவர் மதுபானம் அருந்திய நிலையில் பேருந்தை வேகமாகச் செலுத்தியதாகத் தெரிவித்து கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காரைநகர் சாலை முகாமையாளரிடம் கேட்டபோது, அதிகவேகமாக பேருந்தைச் செலுத்தியதற்காகவே கைது செய்யப்பட்டதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. பயணிகள் வேறு பேருந்தில் பயணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பேருந்தை வேறு சாரதி பொறுப்பேற்றுள்ளார் - என்றார். (ஓ.5,105)

# சாம்பல் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 21
பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பான பன்னாட்டு நிதி நடவடிக்கை பணிக் குழுவின் சாம்பல் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 நாள்களாக பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் நிதி நடவடிக்கை பணிக் குழுவின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் இலங்கையை சாம்பல் பட்டியலில் இருந்து நீக்க இந்தக் குழு முடிவு செய்தது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சி எடுக்காமல் இலங்கை அரசு அமைதியாக இருப்பதாக குற்றம்சாட்டி சாம்பல் பட்டியலில் சேர்த்து கண்காணிப்புக்கு உட்படுத்த முடிவெடுக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு அர்ஜென்டினாவில் நடந்த கூட்டத்தில் பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கை போதுமானதாக இல்லை என்பதால் இலங்கை சாம்பல் பட்டியலில் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நிதி நடவடிக்கை பணிக் குழுவின் கூட்டம் கடந்த 5 நாள்களாக பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் பரிஸ் நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் இறுதிநாளில் இலங்கையை சாம்பல் பட்டியலிலிருந்து நீக்க பணிக் குழு முடிவு செய்தது. (ஓ.5)

## பிரியங்க பெர்னான்டோவின்

# இராஜதந்திர விலக்குரிமையை மதித்து நடக்குமாறு கோரிக்கை



கொழும்பு, ஒக். 21
பிரிட்டனின் பொது ஒழுங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு, இராஜதந்திர விலக்குரிமை உள்ளது என்றும், அதனை பிரிட்டன் மதித்து நடக்க வேண்டும் என்றும் இலங்கை கோரியுள்ளது.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களை நோக்கி, கழுத்தை அறுத்து விடுவது போன்று எச்சரிக்கை செய்திருந்தார் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ. இந்த விவகாரத்தால் எழுந்த நெருக்கடிகளை அடுத்து, தூதரக பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும், அவருக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தில் மயூரன் சதானந்தன் என்பவர், வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு மீள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இந்த வழக்கு வரும் நவம்பர் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை இலங்கை அயலுறவுத் துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், லண்டனில் உள்ள தூதரகத்தில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ இராஜதந்திரியாகப் பணியில் இருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பதால், அவருக்கு வியன்னா இராஜதந்திர உறவுகள் குறித்த 1961ஆம் ஆண்டின் பிரகடனங்களின் அடிப்படையில் விலக்குரிமை உள்ளது என்று தெரிவித்துள்ளது. இந்தக் கடப்பாட்டை பிரிட்டன் மதிக்க வேண்டும் என்று கோருவதாகவும் அயலுறவுத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வழக்கு இடம்பெற்ற தினத்தன்று வெஸ்மினிஸ்ரர் நீதிமன்றுக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

# ஐ.தே.க. - கூட்டமைப்பு ஒப்பந்தம்; வதந்திகளைப் பரப்பிவிட்டுள்ளனர்

## நளின் பண்டாரா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21
ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளதாக வதந்திகள் பரப்பப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது கொள்கைகளுடன் ஒத்துச் செல்பவர்களுடன் நாம் இணைந்து பயணிப்போம். நாம் அறிந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனநாயக அரசியல் கட்சியாகும். போர்க் காலத்தின்போதும் இந்த கட்சி ஜனநாயக ரீதியாகவே செயற்பட்டது. போரில் ஈடுபட்டு வட கிழக்கை வேறு இராச்சியமாகக் கோரிய வரதராஜப்பெருமாள் தற்போது பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவுக்கு ஆதவளிக்கின்றார்.

இவர்களால் பரப்பப்படும் பொய்யான வதந்திகள் குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படாது வடக்கு கிழக்கில் மாத்திரமின்றி முழு நாட்டிலுமுள்ள மக்களின் மனதில் இடம்பிடிக்கும் வகையில் செயற்பட்டால் மாத்திரமே தேர்தலில் வெற்றி பெற முடியும். அவ்வாறு மக்கள் மனதில் சஜித் பிரேமதாச இடம்பிடித்துள்ளார் - என்றார். (ஓ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பில்...

டுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் கொலனியில் நகுலேஸ்வரன் ராஜேஸ்வரி என்பவரின் தோட்டக்காணியிலேயே எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்ட நிலையில் வெளிப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காணி பதப்படுத்திய போது, எலும்புக் கூடுகள் தென்பட்டன. இதுதொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அந்த இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் இன்று தடயவியல் விசாரணை இடம்பெறும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ,5,ரி3)

## மூடுந்தை...

டைந்தனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சி ஏ-9 வீதியில் 156ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது.

விபத்தில் மூடுந்தில் பயணித்த 5 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் மூவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் வசாவிளானைச் சேர்ந்தவரே உயிரிழந்தார். படுகாயமடைந்தவர்களில் 30 வயது குடும்பப் பெண்ணுடன் அவரது ஒன்றரை வயது குழந்தையும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்த மூடுந்தை வாகனத்தை எதிர் திசையில் கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். டிப்பர் வாகனத்தின் பிரேக் செயலிழந்தமையால் விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஒ,5,6)

## யாழ். ...

திகதியிடப்பட்டு நியமனம் வழங்கியதாக காட்ட முற்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் குறிப்பிப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் பேரவைக்கு பதவிவழி உள்வாரி உறுப்பினர்களாக நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஒன்று அதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுவது வழமையாகும். கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையில் இருந்த 14 உள்வாரி உறுப்பினர்களுக்கு ஈடாக 15 வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இந்த வருட முற்பகுதியில் இந்து கற்கைகள் பீடம் புதிதாக உருவாக்கப்பட்டதன் காரணமாக உள்வாரியாக அதன் பீடாதிபதி உள்வாங்கப்பட்டதனால் அதனைச் சமப்படுத்தும் வகையில் புதிதாக வெளிவாரி உறுப்பினர் ஒருவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்திருந்தது.

இந்த நியமனம் அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நியமனத் திகதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், பல்கலைக்கழகப் பதிவாளரது இறப்பர் முத்திரை ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதியாகவும் அந்த நியமனக் கடிதத்தில் உள்ளதாகவும் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ,5,105

## வெளிநாட்டு...

முகவர்கள் பலர் அரச தலைவர் தேர்தல் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக கொழும்புக்கு வந்துள்ளனர்.

அரசியல் கட்சிகள் எவ்வாறு எதிர்த்துப் போட்டியிடுகின்றன என்பதை கவனிப்பதற்காக புலனாய்வு அமைப்புகள் இரகசியமாக பணியில் ஈடுபட்டுள்ளன.

வெளிநாடுகளின் தலையீடுகள், மற்றும் கட்சிகளுடனான தொடர்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டுள்ளதாக தோன்றுகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஒ,5)

## 5 கட்சிகளின்...

முடிவெடுக்கும். இந்தக் கூட்டு ஒரு நிரந்தரக் கூட்டாக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

5 தமிழ்க் கட்சிகளின் கூட்டு, அரச தலைவர் தேர்தலுக்கானது மாத்திம் என்று கூட்டின் பங்காளிகளில் ஒருவரான ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்திருந்த நிலையில், மற்றொரு பங்காளிக் கட்சித் தலைவரான சித்தார்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புளொட் அமைப்பின் மையச் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தான் ஒரு தேசியவாதி என்று சிங்கள மக்களுக்கு காட்டி அவர்களது பெரும்பான்மை வாக்குகளை பெறுவதற்கான முயற்சியாகவே, கோத்தபாய ராஜபக்ச 13 அம்சக் கோரிக்கைகளை நிராகரிப்பதை பார்க்கமுடியும். நிராகரிக்கும் முடிவை பத்திரிகை வாயிலாக தெரியப்படுத்துகிறார்களே தவிர நிராகரிப்பதாகவோ, தமிழ்கட்சிகளைசந்திக்கவிரும்பவில்லை என்றோ எம்மிடம் கூறவில்லை. ஆனால் நாங்களாகவும் அவர்களைச் சந்திக்கப் போவதும் இல்லை. அவர்களுக்கே தேவையுள்ளது. அவர்களுக்கு வாக்கு வேண்டும் என்றால் கேட்கட்டும்.

எமது கோரிக்கைகளை, தேர்தலுக்கு அப்பாற்பட்டு உண்மையான மனத்துடன், துணிவுடன் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளர் யாராக இருந்தாலும் அவரை ஆதரிப்போம். மக்களது விருப்பத்தை மீறி நாம் எதனையும் செய்யமுற்பட்டால் அது தோல்வியிலேயே முடியும்.

எமது கோரிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டாட்சி, ஒற்றையாட்சி நீக்கம், சுயாட்சி தொடர்பான விடயங்கள், அரச தலைவரால் மாத்திரம் தீர்க்கப்பட முடியாதவை. கடந்த காலங்களிலும் சந்திரிகா அம்மையாரால் அதனைச் செய்ய முடியவில்லை. நாடாளுமன்றத்தில் அவர் தனது தீர்வுத் திட்டத்தை சமர்பித்துச் செயற்படுத்த முடிய வில்லை.

நாடாளுமன்றத்தில் மூன்றிலி ரண்டு பெரும்பான்மை, பொது வாக்கெடுப்பு என்று பல விடயங்கள் இருக்கின்றன. இவை இருக்கும் போது நாங்கள் அரசியல் அறிவுகெட்டவர்கள் போல உடனடியாக இதனைச் செய்து முடிப்பா ர்கள் என்று எண்ண முடியாது. ஒரு தனிப்பட்ட அரச தலைவர் இதனைச் செய்து விடுவார் என்றும் சொல்ல முடியாது. எனினும் அந்த 13 கோரிக்கைகளில் நாடாளுமன்றத்தின் அனுமதியில்லாமல் அரச தலைவர் மாத்திரம் நிறைவேற்ற கூடிய அம்சங்கள் இருக்கிறன. அதை நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு உறுதி தருவார்களா என்பதை நிச்சயமாக பார்ப்போம் - என்றார். (ஒ,5,110)

## முன்னாள்...

இதையடுத்து, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவின் கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் அண்மைக் காலமாக செய்து வந்த பரப்புரைகள் சிவில் சமூகத்தை பீதியடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மிகவும் கடுமையான இனவாத அடிப்படைக் கருத்துக்களை வெளியிட்டு வந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன, மெதகொட அபயதிஸ்ஸ தேரர், சரத் வீரசேகர போன்றவர்கள் தற்பொழுது இனவாத கருத்துக்கள் வெளியிடுவதனை வரையறுத்துக் கொண்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். இது ஓர் தேர்தல் தந்திரோபாயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ,5)

## ஆறுமுக...

இவ்வாறு சிவசேனை அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பியுள்ள செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அலையென வந்த அந்நியப் பண்பாட்டுப் படையெடுப்பைத் தனி ஒருவனாய் ஈழத்தில் தடுத்தவர். ஓடங்களில் வள்ளங்களில் படகுகளில் தோணிகளில் வடகடலைக் கடந்து தமிழகம் சென்று மீண்டவர். மாட்டு வண்டிகளில் குதிரை வண்டிகளில் ஈழத்திலும் தமிழகத்திலும் தெருத்தெருவாக அலைந்தவர். இவற்றையெல்லாம் செய்தவர் ஆறுமுகநாவலர்.

யாழ்ப்பாணத்துக்கு பன்னாட்டு வானூர்தி நிலையம் மீண்டும் வந்துவிட்டதே எனத் தமிழர்கள் மகிழ்கிறார்கள். ஆறுமுக நாவலர் பன்னாட்டு வானூர்தி நிலையம் என்று தம் வானூர்தி நிலையத்தை அழைக்க ஈழத்தமிழர்கள் விரும்பு கிறார்கள்.

சைவ தமிழ் அமைப்புகள் ஒரே குரலில் இலங்கை அரசுக்கு இந்த வேண்டுகோளை வைப்பதால், இந்த மண் பெற்றெடுத்த பயணப் பெருமகன், நடைபுகழ் நாவலர் பன்னாட்டு ஆறுமுகநாவலர் ஆவார் என்றுள்ளது. (ஒ,5)

## நாட்டைப்...

தெரிவித்துள் ளார்.

கட்டுநாயக்கவில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே வடக்கில் வானூர்தி நிலையம் ஒன்றை அமைக்கத் தொடங்கி விட்டார். இதன் மூலம் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்க முடியும். அவர்கள் ஏற்கனவே நாட்டைப் பிரித்து விட்டார்களோ என்ற தீவிரமான சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டுகளாக கட்டுநாயக்க வானூர்தி நிலையம் வழியாக வந்தவர்கள், இனி பலாலி வானூர்தி நிலையம் வழியாக செல்வார்கள். முதலாவது வானூர்தி கட்டுநாயக்கவில் தரையிறங்கிய பின்னரே, பலாலியில் தரையிறங்க வேண்டும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,5)

## பலாலி...

நிலையத்தின்பணிகளை முடிவுறுத்தாமல் திறந்து வைத்துள்ளார்கள் என்று சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது உத்தியோக பூர்வ கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் மூன்று படங்களை அதில் தரவேற்றியுள்ளார். அந்தப் படங்கள் தனக்கு இன்று (நேற்று) கிடைத்தவை என்று குறிப்பிட்டுள்ளார். அதன் கீழ், அரச தலைவர் தேர்தலுக்காக பணிகளை நிறைவுறுத்தாமல் திறந்துள்ளார்கள் என்பதற்கு மற்றுமொரு ஆதாரம் என்று குறிப்பிட்டுள்ளார். தமது ஆட்சி அமைந்ததும், பலாலி வானூர்தி நிலையம், கொழும்பு தாமரைத் தடாகம் என்பன பன்னாட்டுத் தரத்துக்கு அமைவாக பூர்த்தி செய்யப்படும் என்று பதிவிட்டுள்ளார். (ஒ,5

## கோத்தா...

கண்டவாறு கூறினார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலராக கோத்தபாய ராஜபக்ச இருந்த போது, யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தவர் மகிந்த ஹத்துருசிங்க. இவர்களது காலத்திலேயே வலி.வடக்கில் 6 ஆயிரத்து 348 ஏக்கர் காணிகளை இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கான அரசிதழ் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்த பின்னர் அன்றைய பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவால் யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியான நான் நியமிக்கப்பட்டிருந்தேன். இங்கு ஐந்து ஆண்டுகள் கடமையாற்றியிருக்கின்றேன்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்ற வேண்டிய தேவை இருந்தது. அரச நிறுவனங்களுடன் இணைந்து அன்றைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உதவியுடன் கோத்தபாய ராஜபக்சவின் இணைப்புடன் இராணுவத் தளபதியின் ஆலோசனையில் இந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தேன். 21 ஆயிரத்து 550 ஆயிரம் ஹெக்டேயர் நிலங்களை விடுவித்து பல ஆயிரம் மக்களைக் குடியேற்றியிருந்தோம்.

பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உதவிகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள், வீட்டுத் திட்ட உதவிகள் என்று இங்கு பல்வேறு பணிகளை இராணுவம் முன்னெடுத்திருந்தது. இவை அனைத்தையும் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் தலைமைத்துவத்திலும் அவரது எண்ணக்கருவிலேயே செய்தோம்.

மேலும் போர்க் குற்றங்கள் தொடர்பாக இப்போது கதைக்கப்பட்டு வருகிறது. ஆனால் பாதுகாப்பு ஆலோகர் ஒருவர் கூறியது போன்று போர்க் குற்றங்கள் இலங்கையில் நடைபெறவில்லை. போரில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தது என்பது உண்மைக்குப் புறம்பானது. போர்க் குற்றங்களில் எமது ராணுவம் ஈடுபடவில்லை. எமது ராணுவம் அப்படி நடப்பதும் இல்லை. இந்தப் போர்க் குற்றங்கள் சம்மந்தமாக கதைப்பது எனது பொறுப்பும் அல்ல - என்றார்.

(ஒ,5,ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரஷ்யாவில் உடைந்தது அணை!
### 15 பேர் சாவு

மொஸ்கோ.ஒக்.21
ரஷ்யாவின் க்ராஸ்னோயார்ஸ்க் நகரில் அமைந்துள்ள அணை ஒன்று உடைந்தது. இதன் காரணமாக 12 பேர் சாவடைந்தனர். 15க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.
பலர் காணாமல் போயினர். நீரிலும், சகதிக்குள்ளும் சிக்கிக் கொண்டவர்களை மீட்கின்ற பணிகள் நடந்து வருகின்றன. மீட்புப் பணியில் உலங்குவானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
அணை உடைந்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் சட்ட விதிகளுக்கு உட்பட்டு அணை கட்டப்படாததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## கானாவில் கடும் மழை
### 28 பேர் சாவு

அக்ரா.ஒக்.21
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவில் கடும் மழை பெய்தது. இதன் எதிரொலியாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு சார்ந்த விபத்துகளில் சிக்கி 28 பேர் சாவடைந்தனர். கானாவின் வடகிழக்கு பகுதிகளில் கடந்த சில நாட்களாக இடைவிடாது தொடர்ந்து பெய்து வருகின்ற இந்தக் கடும் மழையால் சுமார் 300 வீடுகள் இடிந்தன. வீடுகளை இழந்த சுமார் 700 பேர் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

### போர் நிறுத்தத்தை மீறி
# சிரியா மீது துருக்கி மீண்டும் தாக்குதல்!

அங்காரா.ஒக்.21
சிரியாவின் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகளைக் குறிவைத்துத் துருக்கி நடத்தி வந்த போர் நடவடிக்கைகளை 5 நாள்கள் தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஒப்புதல் அளித்த துருக்கி அரசு மீண்டும் தாக்குதலைத் தொடங்கியது. இந்தத் தாக்குதலால் 5 பேர் சாவடைந்தனர். குர்திஷ் ஆயுததாரிகள் மீதான தாக்குதல் தொடர்பாக துருக்கி அதிபருடன் அமெரிக்கத் துணை அதிபர் மைக் பென்ஸ் பேச்சு நடத்தியதில் தற்காலிகப் போர் நிறுத்தத் துக்குத் துருக்கி ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ் தெரிவித்தார். துருக்கிய எல்லையிலிருந்து சுமார் 20 மைல் தெற்கே



உள்ள பாதுகாப்பு வலயத்திலிருந்து குர்திஷ் போராளிகளை திரும்பப் பெறுமாறு இந்தப் பேச்சில் முடிவு செய்யப்பட்டது. குர்திஷ்கள் இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படுவதாகத் தெரிவித்தனர். ஆனால், இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் சுமார் ஒருமணி நேரம் மட்டுமே நீடித்ததாகவும் ராஸ் அல்ஜன் நகரின் கிழக்கில் உள்ள பாப் அல்கெய்ர் கிராமத்தின் மீது துருக்கியின் போர் வானூர்திகள் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிரியாவின் போர் நிலவரங்களைக் கண்காணித்து வரும் மனித உரிமை அமைப்பின் தலைவர் அப்டெல் ரஹ்மான் இதை உறுதி செய்தார்.

## ஆப்கானிஸ்தான் மசூதி குண்டுவெடிப்பு
### சாவுகள் 62 ஆக அதிகரிப்பு

காபூல்.ஒக்.21
ஆப்கானிஸ்தானின் நங்கர்கார் மாகாணத்தில் ஹஸ்கா மினா மாவட்டத்தின் ஜா தரா பகுதியில் உள்ள மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 20 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். 50 பேர் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினர். மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பலரது நிலமை கவலைக்கிடமாக இருந்தது. இந்த நிலையில்,



மசூதியில் நடைபெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது.

# பிரெக்சிட்டை 2020 ஜனவரி வரை தாமதப்படுத்துவதற்குத் தீர்மானம்!

லண்டன்.ஒக்.21
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்தை நீடிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்குப் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
புதிய பிரெக்சிட் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாக பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சனும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ஜீன் கிளாட் ஜங்கரும் அறிவித்தனர். இந்த ஒப்பந்தத்தின்படி பிரிட்டன் வசம் முழுக் கட்டுப்பாடும் இருக்கும் என்று போரிஸ். ஜோன்சன் கூறினார். சட்டம், எல்லைகள், வர்த்தகம் போன்றவற்றுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பிரிட்டன் வசம் முழு கட்டுப்பாடும் இருப்பதை இந்தப் புதிய உடன்படிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், சுதந்திரமான வர்த்தகம் மற்றும் நட்பின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு புதிய உறவை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் போரிஸ் ஜோன்சன் செய்துள்ள இந்தப் புதிய உடன்படிக்கையை ஆய்வு செய்வதற்கு அவகாசம் தேவைப்படுவதால் பிரெக்சிட் நடவடிக்கைக்கான காலக்கெடுவை 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை நீட்டிக்க வேண்டும் என்னும் புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன்மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 16 வாக்குகள் வித்தியாசத்தில் லெட்வின் சட்டத்திருத்தம் என பெயரிடப்பட்டுள்ள இந்தச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது.
பிரெக்சிட்
பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.
இதற்குப் பிரிட்டனின் முன்னாள் தலைமை அமைச்சர் டேவிட் கமரூனுக்கு உடன்பாடு இல்லாதபோதும், அரசியல் அழுத்தங்கள் காரணமாக 2016ஆம் ஆண்ல்டி பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், 51.8 சதவிகித பிரிட்டன் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறலாம் என்றும் 48.2 சதவிகிதம் மக்கள் வெளியேற வேண்டாம் எனவும் வாக்களித்தனர். பதவி விலகுவதாக கமரூன் அறிவித்தார். அதன்படி, அவர் பதவியும் விலகினார். தெரசா மே பதவியேற்றார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவது தொடர்பாக பிரெக்சிட் ஒப்பந்தம் கொண்டு வருவதற்கான நடவடிக்கையைத் தொடங்கினார்.
ஆனால், அவரது ஒப்பந்தம், தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு இழுபறி நீடித்ததால் தெரசா மே பதவி விலகினார். போரிஸ் ஜோன்சன் பதவியேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் குர்துக்கள் பதில் தாக்குதல்

அங்காரா,ஒக்.21
சிரியாவில் தாக்குதல் நடத்தி வரும் துருக்கி இராணுவத்தினர் மீது குர்திஷ் ஆயுததாரிகள் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் துருக்கிய சிப்பாய் ஒருவர் சாவடைந்தார். மேலும் ஒருவர் காயமடைந்தார். சிரியாவில் குர்து மக்களைக் குறி வைத்துத் துருக்கி படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தநிலையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியும் துருக்கியப்படை தாக்குதல் நடத்தியது. இதனால் பதிலுக்குக் குர்திஷ்கள் பதில் தாக்குதல் நடத்தினர். இந்த நிலையில் குர்திஷ்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயற்படுவதாகத் துருக்கி குற்றம்சாட்டியுள்ளது.



# சிரியாவில் துருக்கி போர்க் குற்றம்

லண்டன்,ஒக்.21
சிரியாவில் துருக்கி போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளதாகப் பன்னாட்டு மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டி யுள்ளது.
சிரியாவின் வடக்குப் பகுதியில் குர்திஷ்களுக்கு எதிராகத் துருக்கி கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது. தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தின. இந்த நிலையில் துருக்கியப் படைகள் சிரியாவில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகப் பன்னாட்டு மன்னிப்புச் சபை தெரிவித்தது.
துருக்கியப் பாதுகாப்புப் படையினர் வடக்குச் சிரியாவில் போர்க் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். சட்ட விரோதமான தாக்குதலையும் அவர்கள் நடத்தியுள்ளனர். பொதுமக்களின் வீடுகள் இருக்கும் பகுதிகள், மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









லெபனானின் பொருளாதாரம் மோசமடைந்து வருவதைச் சுட்டிக்காட்டி அரசுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் குதித்தனர். லெபனானில் பரவலாக இடம்பெறுகின்ற இந்தப் போராட்டங்களால் லெபனான் முடங்கியது.

சோதனை ஓட்டம்வெற்றி

## உலகின் மிக நீண்ட தூரம் பறக்கும் வானூர்தி சிட்னியில் தரையிறங்கியது

உலகில் நீண்ட தூரம் பறக்கும் வானூர்தி அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலிருந்து புறப்பட்டு ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சென்றடைந்தது.
நியூயார்க் முதல் சிட்னி வரை இடைநில்லாமல் 19 மணிநேரம் 16 நிமிடங்கள் பயணித்துள்ளது குவான்டாஸ் நிறுவனத்தின் குவாண்டாஸ் கியுஎப்7879 என்கிற இந்தப் பயணிகள் வானூர்தி. நியூயோர்க் நகரிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 49 பேருடன் புறப்பட்ட குறித்த வானூர்தி இடைநில்லாமல் பயணிக்கும் அளவுக்கு போதுமான எரிபொருள் நிரப்பப்பட்டு இருந்தது.
16 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவு பறக்கும் அளவுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தாலும் 19 மணிநேரத்துக்கும் அதிகமாகக் குறித்த வானூர்தி வானில் பறந்து தனது பயணத்தை முடித்தது.




# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நற்செயல்கள் அனுகூல பலன்களை பெற்று தரும். இஷ்ட தெய்வ அருளால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்:** சிலர் சுயலாபத்திற்காக உதவ முன் வருவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு வளர்ச்சியை உருவாக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதி தரும்.

**மிதுனம்:** செயலில் லட்சிய நோக்கம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் பேச வேண்டாம். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**சிம்மம்:** சொந்த நலன்களை தியாகம் செய்வீர்கள். பலராலும் அனுகூலம் கிடைக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவீர்கள். பணப்பரிவர்த்தனை சீராகும்.

**கன்னி:** வெளி வட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். தொழில், வியாபார நடைமுறைசீராக, புதிய யுக்திபயன்படுத்துவது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும். வெளியூர் பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**துலாம்:** எதிர் வரும் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்கு பயன்படும்.

**விருச்சிகம்:** உருவாகிறகூடுதல்பணிகளால் சிரமம் ஏற்படலாம். பொறுப்புணர்வுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். பணவரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும்.

**தனுசு:** வாழ்வில் புதிய வசந்த காலம் உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும். அபரிமிதமான அளவில் பணவரவு கிடைக்கும். புதிய வாகனம் வாங்க திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** முக்கியமான விஷயத்தில் சுமூக தீர்வு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணி புரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உருவாகும்.

**கும்பம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை தரும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.

**மீனம்:** நண்பரின் யதார்த்த பேச்சு சங்கடம் ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணவரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட குத்துச்சண்டை முல்லைக்கு 5 பதக்கங்கள்!

தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் 5 பதக்கங்களைச் சுவிகரித்தது.
கண்டி நாவலப்பிட்டி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய முள்ளியவளை வித்தியா னந்தாக் கல்லூரி மாணவன் கே.நிதிஸ்வரன் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் 6064 கிலோ எடைப்பரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், வி.யான்சன் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் 4952 கிலோ எடைப்பரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், கே.தனுசியா 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் 5458 கிலோ எடைப்பரிவில் வெண்கலப் பதக்கத்தையும், முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய மாணவன் றூபன் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் 4549 கிலோ எடைப்பரிவில் வெண்கலப் பதக்கத்தையும், முத்தையன்கட்டு இடதுகரை மகா வித்தியாலய மாணவன் எ.தமிழரசன் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குத்துச்சண்டைப்போட்டியில் 5256 கிலோ எடைப்பரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)



# ரியல் மட்ரிட் படுதோல்வி!

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி படுதோல்வியடைந்தது.
ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து மல்லோர்கா அணி மோதியது. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் லாகோ மல்லோர்காவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.
முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது மல்லோர்கா.
இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மல்லோர்கா. (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

**தேசியமட்ட கால்பந்தாட்டம்**

45ஆவது தேசியமட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பதுளை வின்சென்ட் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. ஆண்கள் பிரிவில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல் மாகாண அணி மோதவுள்ளது. பெண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல் மாகாண அணி மோதவுள்ளது.

**சிவானந்தா கழக கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சூப்பர்8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கோண்டாவில் வடக்கு மத்திய கழகத்தின் கால்பந்துத் தொடர்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோவுள்ளது. (ம-23)




## தேசியமட்ட குத்துச்சண்டையில் வவுனியாவுக்கு இரு பதக்கங்கள்

தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா மாவட்டத்துக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்தன. கண்டி நாவலப்பிட்டி உள்ளக விளையாட்ட ரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் வவுனியா காமினி மகா வித்தியாலய மாணவி துலக்சன பிரியா 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 5154 கிலோ எடைப்பரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி சயந்தினி 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான 4548 கிலோ எடைப்பரிவில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

# எவர் தலைவரானாலும் அடுத்த வருடம் சிறந்த ரி-20 அணி உருவாகவேண்டும்

## லசித் மலிங்க தெரிவிப்பு

எவர் அணித் தலைவரானாலும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு சிறந்த அணியைத் தயார் செய்ய வேண்டியது அவசியம் என இலங்கை அணியின் ரி-20 அணித் தலைவர் லசித் மலிங்க தெரிவித்தார்.
ஆஸ்திரேலியாவுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி- 20 தொடரில் விளையாடவுள்ளது இலங்கை அணி. இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.
இது குறித்து லசித் மலிங்க தெரிவிக்கையில்;
ரி-20 அணிக்கு ஒரு புதிய தலைவரை, புதிய அணியைத் தெரிவு செய்தமை நாங்கள் எடுத்த முயற்சிக்கு கிடைத்த பெரிய வெற்றி. அத்துடன் நான் பங்குபற்றாததாலேயே புதிய தலைவர் ஒருவர் தெரிவானார். நான் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது ரி- 20 இல் விளையாடும் எனது கிரிக்கெட் வாழ்க்கையில் சொற்ப காலமே எஞ்சியிருக்கின்றது. இதனால்தான் நான் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றபோது எவர் அணித் தலைமையை ஏற்றாலும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணப் போட்டிக்கு சிறந்த அணியை உருவாக்க வேண்டும் என்று கூறியிருந்தேன்.
பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் பயணத்தில் நான் இடம்பெறாததால்தான் புதிய தலைவர் ஒருவருக்கு வாய்ப்பு கிடைத்தது என சமூக வலைத் தளங்களில் கூறப்பட்டது. அது மிகவும் நல்ல விடயம். எனவே நான் பங்குபற்றாதது ஒருவகையில் நல்லது என்று கருதுவதுடன் திருப்தியும் அடைகின்றேன்.
பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தசுன் சானக்க சிறப்பாகச் செயற்பட்டார். அத்துடன் கசுன் ராஜித்த, நுவன் பிரதீப், லஹிரு குமார ஆகியோருக்கு விளையாட வாய்ப்பு கிடைத்தது. அந்த வகையில் நான் விளையாடாதது குறித்து திருப்தி அடைகின்றேன்.



பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 போட்டியில் வெற்றி பெற்ற அணியில் இடம்பெற்ற வீரர்களே ஆஸ்திரேலியா செல்லும் அணியில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் அடங்கிய அணியில் நானும் இணைவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் நியூஸிலாந்து கிரிக்கெட் பயணத்தில் பிரகாசித்த குசல் ஜனித் பெரேரா, திக்வெல்ல, குசல் மெண்டிஸ் ஆகியோருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அப்படிப் பார்க்கும்போது அதிசிறந்த ரி-20 கிரிக்கெட் வீரர்களே இந்த சுற்றுப்பய ணத்தில் இடம்பெறுகின்றனர்.
நான் ஒரு விடயத்தை இங்கு கூறவிரும்புகின்றேன். இளம் வீரர்கள் பிரகாசிக்கும்போது நான் ஓய்வு பெறாமலிருப்பது பெரிய பிரச்சினையாக இருக்கலாம். இளம் வீரர்களை எடுத்துக்கொண்டால் தசூன் சானக்க, செஹான் ஜயசூரிய போன்றவர்கள் 2013 ஆம் ஆண்டு ரி-20 கிரிக்கெட்டின் மூலமே அறிமுகமானார்கள். இந்தத் தீர்மானத்தை நான் அப்போது எடுத்தபோது அனைவரும் என்னை விமர்சித்தனர். எனக்கு விரும்பிய நேரத்தில் நான் ஓய்வு பெறுவேன்- என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்பராஸூக்குப் பதிலாக ரிஸ்வான்


பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ரி20 மற்றும் டெஸ்ட் வடிவ ஆட்டங்களில் இருந்து சர்பராஸ் அகமட் நீக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்குப் பதிலாக ரிஸ்வான் சேர்க்கப்படுவார் என்று கருதப்படுகின்றது.

சர்பராஸ் அணியின் இருந்த காலத்தில் அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டால் ரிஸ்வான் பதில் வீரராக இணைக்கப்பட்டு வந்துள்ளார். பதில் வீரராகச் சேர்க்கப்படும் போதெல்லாம் சர்பராஸ் அகமட் சிறந்த ஆட்டத்தையே வெளிப்படுத்தியுள்ளார்.

இதனால்தான் ரிஸ்வானுக்கு அதிக வாய்ப்பு என்று கருதப்படுகின்றது. (ம)



# வலுக்கட்டாயமாக சர்பராஸ் நீக்கம்!




பாகிஸ்தான் அணியின் டெஸ்ட் மற்றும் ரி20 வடிவங்களில் இருந்து சர்பிராஸ் அகமட் நீக்கப்பட்டுள்ள நிலையில், அவர் வலுக்கட்டாயமாகவே நீக்கப்பட்டார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதாவது 3 வடிவங்களிலிருந்தும் சர்பராஸ் அகமெட் தானாகவே விலக வேண்டும், என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அவரை வலியுறுத்தியுள்ளது. ஆனால் அவர் முடியவே முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டதாக தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் கிரிக்கெட் சங்க நிறைவேற்றுப் பணிப்பாளர் வாசிம் கானை வெள்ளியன்று சர்பராஸ் அகமெட் சந்தித்தபோது மரியாதையுடன் விலகிவிடுமாறு அறிவுறுத்தப்பட்டதாக தெரிகிறது. அதற்கு சர்பராஸ் அகமெட், முடியவே முடியாது, வேண்டுமானால் கிரிக்கெட் வாரியம் என்னை நீக்கட்டும் என்று திட்டவட்டமாகக் கூறியதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த பெயர் கூற விரும்பாத உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## டோனியை பின்பற்ற விரும்புகிறேன் நான்

### டினேஸ் கார்த்திக் சொல்கிறார்



வெற்றிகரமாக ஆட்டத்தை முடிப்பதில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனியை பின்பற்ற விரும்புகின்றேன் என்று டினேஸ் கார்த்திக் தெரிவித்தார்.

விஜய் ஹசாரே கோப்பைக்கான உள்ளூர் ஒருநாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் தமிழக அணி தான் விளையாடிய 9 'லீக்' ஆட்டங்களிலும் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது. விஜய் ஹசாரே போட்டியில் தமிழக அணியின் தலைவரும் வீரருமான டினேஷ் கார்த்திக்கின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது.

இந்த நிலையில் தனது ஆட்டம் குறித்து டினேஷ் கார்த்திக் தெரிவித்தாவது:

கடைசி கட்டத்தில் சில பந்துப்பரிமாற்றங்கள் இருக்கும்போது அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நெருக்கடியில் இருக்கும்போது அதிக ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். டோனி இந்திய அணிக்காக பல ஆண்டுகள் இதை செய்திருக்கிறார். அவரையே நானும் பின்பற்றுகிறேன்- என்றார். (ம)

## பங்களாதேஷ்க்கு எதிராக கோக்லிக்கு கட்டாய ஓய்வு

நவம்பர் மாதம் நடைபெற உள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான ரி20 தொடரில் இந்திய அணியின் தலைவர் கோக்லி விளையாடமாட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த ஓர் ஆண்டாக தொடர்ச்சியாக அவர் விளையாடி வருவதால் அவருக்கு ஓய்வு அளிக்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன

பங்களாதேஷ் அணி அடுத்தமாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்கிறது. 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரிலும், 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் வங்கதேசம் விளையாட உள்ளது.

இந்திய அணி கடந்த ஓர் ஆண்டில் 10 டெஸ்ட் போட்டிகள், 30 ஒருநாள் போட்டிகள், 16 ரி20 போட்டிகள் போன்றவற்றில் விளையாடியுள்ளது. இந்த 3 விதமான போட்டிகளிலும் விராட் கோக்லி இடம்பெற்றுள்ளார். இந்திய அணிக்கு விராட் கோலி தொடர்ச்சியான பங்களிப்பு செய்துவருவதால், அவரின் உடல் நிலையை சீராக வைத்திருக்கவும், தனிப்பட்ட ஓய்வு அளிக்கவும் அணி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதனால், பங்களாதேஷ்க்கு எதிரான ரி20 தொடரில் விராட் கோக்லிக்கு முழுமையான ஓய்வு அளிக்கப்படலாம் என பிசிசிஐ வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரோகித் சர்மா பதில் தலைவராகச் செயற்பட வாய்ப்புக்கள் உள்ளன. (ம)





# ரி-20 உலகக்கிண்ணத்தை நிச்சயம் கைப்பற்றுவேன்!

### டோனியின் வழியில் கோக்லி நம்பிக்கை

ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி20 உலகக்கிண்ணத் தொடரை இந்திய அணி கைப்பற்றும். டோனியின் வழியில் இதைச் சாதிப்பேன் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐசிசி நடத்திய முதல் ரி20 உலகக்கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றி சாதனை படைத்தது. எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பது அறிய இயலாது. மகேந்திர சிங் டோனி தலைமையிலான அணி ரி20 உலகக் கோப்பையை வென்றதுபோல என் தலைமையிலான அணியும் அடுத்து 2020ஆம் ஆண்டு நடைபெறும் ரி20 உலகக் கோப்பையை வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் ரி20 உலகக் கோப்பையை கைப்பற்றும் இரண்டாவது இந்திய கேப்டன் என்ற சாதனை என்வசமாகும். 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் மகளிர் ரி20 உலக கோப்பையையும் இந்திய பெண்கள் அணி கைப்பற்றும் என நம்புகிறேன்' - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோகித் சர்மா இரட்டைச் சதம் இந்திய அணி வலுவான நிலை


தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரோகித் சர்மா இரட்டைச் சதம் விளாச இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது. பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி தடுமாற்றம் காட்ட ஆரம்பித்துள்ளது.

புனேயில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. ரோகித் சர்மா 113 ஓட்டங்களுடனும், ரகானே 83 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இருவரும் நேற்றுத் தொடர்ந்தும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். சதம் கடந்தார் ரகானே. சுமார் மூன்று ஆண்டுகளின் பின்னர் அவர் பதிவுசெய்த முதலாவது சதமாக இது அமைந்தது.

115 ஓட்டங்களுடன் ரகானே ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ரோகித்துடன் இணைந்து சிறப்பாக விளையாடினார் ஜடேயா. ஜடேயா அரைச்சதத்தையும் ரோகித் இரட்டைச் சதத்தையும் பதிவுசெய்தனர். 212 ஓட்டங்களுடன் ரோகித்தின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்ததை அடுத்து இலக்குகள் மளமளவெனச் சரிக்கப்பட்டன. உமேஸ் யாதவ் 31 ஓட்டங்களைக் குவித்தார். அவற்றில் 5 சிக்சர்கள். இந்திய அணி 9 இலக்குகளை இழந்து 497 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. பந்துவீச்சில் லின்ட் 4 இலக்குகளையும், ரபாடா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 2 இலக்குகளை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. (ம)





கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 509 திகதி: 2019 ஒக். 18
வர்ணம்: பச்சை வெள்ளி
O 12 18 25 54
வாசி தொகை 9 7 8 0 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.144,167,368/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1060
சீட்டிழுப்பு திகதி 2019.10.19 சனிக்கிழமை
B 17 53 60 72
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 767
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.10.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,277,165/-
வெற்றி இலக்கங்கள் 24 32 44 66 H
விசேட வெற்றி இல. 3387
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
திகதி 20.10.2019 வெற்றி வாரம் 2653 வர்ணம் ஊதா
துலாம்
வெற்றி இலக்கங்கள் 15 17 21 30
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 575, 196/=
21.10.2019 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

## சாதனையாளர்களின் பட்டியலில் ரோகித்!

இந்திய டெஸ்ட் அணியின் ஆரம்ப வீரர் ரோகித் சர்மா நேற்று இரட்டைச் சதத்தை நிறைவுசெய்து சாதனையாளர்களின் பட்டியலில் இணைந்தார்.

ரோகித் சர்மா ஒருநாள் ஆட்டங்களில் மூன்று இரட்டைச் சதங்களைப் பதிவுசெய்திருந்த போதிலும் டெஸ்ட் ஆட்டங்களில் அணியில் நிலையான இடம் இல்லாமல் தடுமாறி வந்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் முதல்முதலாக ஆரம்ப வீரராகக் களமிறக்கப்பட்டார். முதலாவது ஆட்டத்தில் சதம் விளாசிய அவர், நேற்றுமுன்தினம் ஆரம்பித்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்தார்.

இதன்மூலம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.

இந்தச் சாதனையை இதுவரை சச்சின், சேவாக், கெய்ல் ஆகியோர் மட்டுமே படைத்துள்ளனர். (ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் உள்ள புடவைக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம் - 13,500/=
(மதிய நேர உணவுடன்)
தொடர்புகளுக்கு- 077 855 4840



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.